

சாதித்த இஸ்ரோ..

நம் நாட்டின் தொலையுணர்வு பயன்பாட்டுக்காக இஸ்ரோ சார்பில் கார்போசாட் ஸ்காட் சாட், ரிசாட் உட்பட பல்வேறு செயற்கைக்கோள்கள் விண்ணில் நிலை நிறுத்தப்பட்டு வருகின்றன. இந்த வரிசையில் புவி கண்காணிப்பு மற்றும் பேரிடர் மீட்பு பணிகளுக்கான இ ஓ எஸ் 03 (ஜி ஐ சாட்) என்ற அதிநவீன ஜியோ இமேஜிங் செயற்கைக்கோளை இஸ்ரோ தயாரித்தது. இது ஜி எஸ் எல் வி எஃப் 10 ராக்கெட் மூலம் 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12 ஆம் தேதி விண்ணில் செலுத்தப்பட்டது. ஆனால் கிரையோ ஜெனிக் இயந்திரத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறால் முயற்சிக்குரிய பலன் கிடைக்கவில்லை. இதையடுத்து ஜி ஐ சாட் மீண்டும் உருவாக்கப்பட்ட விண்ணில் ஏவப்படும் என்று இஸ்ரோ அறிவித்தது.

வடிவமைக்கப்பட்ட அதிநவீன இ ஓ எஸ் 05 (ஜி ஐ சாட் 1 ஏ) செயற்கைக்கோளை ஜி எஸ் எல் வி எஃப் 17 ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டது. 2. 367 கிலோ எடையுள்ள இந்த ராக்கெட்டை ஏவுதலுக்கான 27.50 மணிநேர கவுண்டவுன் கடந்த செப்டம்பர் இரண்டாம் தேதி 11:25 மணிக்கு தொடங்கியது. இதை அடுத்து ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் மையத்தின் இரண்டாவது ஏவுதளத்தில் இருந்து ஜி எஸ் எல் வி எப் 17 ராக்கெட் அதிகாலை 2:55 மணிக்கு திட்டமிட்டபடி விண்ணில் செலுத்தப்பட்டது. தரையில் இருந்து புறப்பட்ட இந்த ராக்கெட் 19 நிமிடங்களில் திட்டமிட்ட புவி வட்ட சுற்றுப்பாதையில் இ ஓ எஸ் 05 செயற்கைக்கோளை வெற்றிகரமாக நிலை நிறுத்தியது.

10 ஆண்டுகள் ஆயுள் காலம் கொண்ட இந்த செயற்கைக்கோள் அதிகபட்சமாக 31.026 கிலோ மீட்டர் அளவில் ஆன சுற்றுப்பாதையில் வலம் வரும். அதில் உள்ள உந்துவிசை மோட்டார்கள் மூலம் படிப்படியாக இறுதி கட்ட சுற்றுப்பாதைக்கு மாற்றப்படும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இஸ்ரோவின் வரலாற்றில் முதன் முறையாக புவி கண்காணிப்பு பணியை அடிப்படையாகக் கொண்டு செயற்கைக்கோள் ஒன்று தரையில் இருந்து 3600 கிலோமீட்டர் தொலைவில் உள்ள போடப்பட்ட பாதையில் இருந்து ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள உள்ளது. பிப்ரவரி மாத நிலவரப்படி 21 தொலையுணர்வு செயற்கைக்கோள்கள் செயல்பாட்டில் இருந்தன. அவை அனைத்தும் புவி தாழ்வட்ட பாதை அல்லது சூரிய ஒத்திசைவு சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டது. தற்போது இ ஓ எஸ் 05 செயற்கைக்கோள் புவி வட்ட சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிறுத்தப்பட்டுள்ளது. இந்த செயற்கைக்கோள் வானிலை, விவசாயம், மேக வெடிப்பு, கடல்சார் கண்காணிப்பு தரவுகளை பல ஆராய்ச்சி உள்ளிட்ட பல்வேறு தரவுகளை நிகழ் நேரத்தில் வழங்கும். குறிப்பாக புவியியல் ஒரு பகுதியை நிகல் நேர தன்மையில் தினமும் நான்கு அல்லது ஐந்து முறை படம் பிடிக்கும் திறன் கொண்டது.

நாட்டின் பாதுகாப்பு மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு சிறப்பம்சங்களும் இதில் உள்ளது. இதில் உள்ள 3டி கேமராக்களால் புவிப்பரப்பை 40 மீட்டர் வரை மிகவும் துல்லியமாக படம் பிடிக்க முடியும். வானிலை நிலவரங்களைத் தொடர்ந்து ஆராய்ந்து புயல் உள்ளிட்ட பேரிடர் காலங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள உதவும். மேலும் இந்தியாவின் எல்லைப் பகுதிகளைத் தொடர்ச்சியாகக் கண்காணித்து நாட்டின் பாதுகாப்பு அமைப்புகளுக்குத் தேவையான முக்கிய தகவல்களை அளிக்கும். அதிநவீன செயற்கை கோளின் வெற்றிகரமாக நிலை நிறுத்தம் என்பது புவி கண்காணிப்பில் மேலும் ஒரு புதிய மைல்கள் என்பது மிகவும் பெருமைக்குரியது. இந்த நேரத்தில் மற்றொரு தலைசிறந்த சாதனையால் புதிய அத்தியாயம் படைத்த விஞ்ஞானிகளை நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழ், விஜிலென்ஸ் டிவி, விஜிலென்ஸ் மக்கள் இயக்கம் மற்றும் விஜிலென்ஸ் கல்வி அறக்கட்டளை சார்பில் பாராட்டி வாழ்த்தி மகிழ்வோம்.. விஞ்ஞானிகளுக்கு விஜிலென்ஸ் குடும்பத்தின் சார்பில் ராயல் சல்யூட்..

இணை ஆசிரியர் விஜிலென்ஸ் DR.பா.தமிழ் பாரதி ஆனந்தன்



இரண்டாவது விமான நிலையம் இனியும் சாத்தியமா?

8000 கோடி மக்கள் வரிப்பணம் வீண்..

சென்னை மீனம்பாக்கத்தில் தற்போது இயங்கி வரும் விமான நிலையம் தான் தென்னிந்தியாவின் முதல் பன்னாட்டு விமான நிலையம். 1930 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டுக்கு வந்தது. பயணிகள் எண்ணிக்கை அதிகரிப்பு எதிர்கால சேவைகளைக் கருத்தில் கொண்டு அடுத்தடுத்து விரிவாக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1985 புதிய உள்நாட்டு முனையம், 1989 ல் புதிய சர்வதேச முனையம் பயன்பாட்டுக்கு வந்தன. பின்பு அடுத்தடுத்து விரிவாக்கம் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு 2023 ஏப்ரல் எட்டாம் தேதி புதிய டெர்மினல் திறக்கப்பட்டது. பயணிகள் கையாளும் திறன் ஆண்டுக்கு 2.3 கோடியில் இருந்து மூன்று கோடியாக உயர்ந்தது.

இதன் இரண்டாம் கட்ட பணிகளும் திட்டமிடப்பட்டன. இருப்பினும் விமான நிலையத்தைச் சுற்றியுள்ள நில அமைப்பு ஓடுபாதைகளை அணுகும் வழியில் திரிசூலம் மலை போன்ற தடைகள் விமான நிலையத்தின் எதிர்கால விரிவாக்கத்திற்கு முட்டுக்கட்டையாக அமைந்து விட்டன.

இந்த சூழ்நிலையில்தான் இரண்டாவது விமான நிலையத்தின் தேவை மிக மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியது.

இரண்டாவது விமான நிலையத்துக்கான தொடக்க புள்ளி 1999 ஆம் ஆண்டிலேயே வைக்கப்பட்டு விட்டது. கலைஞர் தமிழ்நாட்டின் முதல்வராக இருந்தபோது ஸ்ரீபெரும்புதூரில் இரண்டாவது விமான நிலையம் அமைக்க தீர்மானிக்கப்பட்டது. பின்னர் 2007 அங்கு சுமார் 4820 ஏக்கரில் புதிய விமான நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டது. ஆனால் நிலம் கையகப்படுத்துதலில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக திட்டத்துக்கு பின்னடைவு ஏற்பட்டது.

இதற்கிடையில் தான் தற்போதைய விமான நிலையத்தை நவீன மயமாக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இரண்டாவது விமான நிலையம் அமையும் வரை உடனடி தேவையாக பயணிகள் கையாளுதலை சமாளிக்க தற்காலிக முயற்சியாகவே பார்க்கப்பட்டது. 2008 ல் அனுமதிக்கப்பட்ட நவீனமயமாக்கல் திட்டம் பயணிகள் திறனை 90 லட்சத்தில் இருந்து 2.3 கோடியாக உயர்த்த திட்டமிடப்பட்டது.

எதிர்கால தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற போக்குவரத்து இணைப்பை வலுப்படுத்தும் நோக்கமாகக் கொண்டு 2021 ல் கிரீன் பீல்ட் விமான நிலையம் அமைப்பதற்கான முனைப்பு தொடங்கப்பட்டது.

பரந்தூர், பன்னூர், படாளம், திருப்போரூர் ஆகிய இடங்களில் ஒன்றை இறுதி செய்வது என முடிவு செய்யப்பட்டது.

இதில் பரந்தூர் மற்றும் பன்னூர் ஆகிய இரண்டு இடங்களை முடிவு செய்து அங்கு இந்திய விமான நிலையங்கள் ஆணையம் ஆய்வு செய்தது.

இதில் முக்கிய காரணம் சிறந்த போக்குவரத்து இணைப்பு அதாவது சென்னை பெங்களூரு, விரைவுச் சாலை மற்றும் தொழில் வழித்தடத்துடன் பரந்தூருக்கு சிறந்த இணைப்பு இருப்பதாக கருதப்பட்டது.

அடுத்த முக்கிய அம்சங்களாக பன்னூருடன் ஒப்பிடும்போது பரந்தூரில் குறைவான குடும்பங்களே இடம்பெயர வேண்டிய நிலை இருந்ததாக மதிப்பிடப்பட்டது. நிலம் கையகப்படுத்துவதும் சாதகமாக அமைந்தது. அதாவது நிலம் கிடைக்கும் தன்மை, உரிமை நிலை மற்றும் கையகப்படுத்தும் செலவு ஆகியவற்றைப் பொருத்தவரை பரந்தூர்





சாதகமாக இருந்தது.

ஒரு ட்ரில்லியன் டாலராக உயர்த்த வேண்டும் என்ற இலக்குடன் ஸ்டாலின் அரசு முன்னெடுத்து ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதார மாநிலமாக உயர்வதற்கான முக்கிய திட்டம் இது என பாராட்டுப் பெற்ற முயற்சி தான் இந்த பரந்தூர் விமான நிலைய திட்டம். இந்தத் திட்டத்திற்கு சிக்கல்கள் தொடர்ந்ததால் விமான நிலையத்துக்கு தேவையான மொத்த நிலப்பரப்பு 4,700 ஏக்கர் என நிர்ணயிக்கப்பட்டது.

இதில் 2800 ஏக்கர் தனியார் நிலமும், 1972 ஏக்கர் அரசு நிலமும் இயங்கும். இதில் முதல் கட்டமாக 2800 ஏக்கர் தனியாரிடமிருந்து கையகப்படுத்துவது என முடிவு செய்யப்பட்டு சுமார் 1700 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு விட்டது.

இந்தக் கனவு திட்டம் நிறைவேறுவது கைக்கெட்டும் தூரம் தான் என தொழில் துறையினர் எதிர்பார்த்து இருந்த நிலையில் தான் புதிதாக பொறுப்பு ஏற்றுள்ள தமிழக வெற்றிக்கழக அரசு இந்தத் திட்டத்தை கைவிடுவதாக அறிவித்துள்ளது.

விமான நிலையம் அமைப்பதற்காக கையகப்படுத்தப்பட்ட 1700 ஏக்கர் நிலத்தின் கதி என்பது தற்போதைய கேள்வி. ஏற்கனவே நில உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீடு வீடுகள் மற்றும் மாற்றுக் குடியிருப்பு வசதிகள் தொடர்பான விவகாரங்களும் அடங்கியுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு சந்தை மதிப்பை விட இரண்டேகால் மடங்கு அதிகமாக பணம் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி கையகப்படுத்தப்பட்ட 1700 ஏக்கர் நிலத்துக்கு எட்டாயிரம் கோடியை அரசு வழங்கியுள்ளதாக அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

திட்டம் ரத்து செய்யப்பட்டதால் நிலம் மற்றும் இழப்பீடு தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகளைத் தெளிவுபடுத்தப்பட வேண்டிய கட்டாயமும் அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

அரசியல்வாதிகள் தங்கள் சொந்த பணம் என்றால் வீணாக விடமாட்டார்கள். மக்கள் வரிப்பணம் என்று வரும்போது வீணாக்கிவிட்டு பிளாஸ்ட் விடுவதாக பொதுமக்கள் வேதனையோடு தெரிவிக்கின்றனர்.

இரண்டாவது விமான நிலைய திட்டம் என்பது காலத்தின் கட்டாயம். பெரும்பான்மை நிலம் கையகப்படுத்தப்பட்டு முதல் கட்ட நடவடிக்கைகள் ஏறக்குறைய முடியும் தருவாயில் உள்ள இந்தத் திட்டத்தை புறக்கணிப்பது தமிழ்நாட்டுக்கு வரவேண்டிய முதலீடுகளையும், வேலை வாய்ப்புகளையும், வளத்தையும் தடுப்பதற்கு சமம் என்கின்றனர் தொழில் துறையினர். குறிப்பாக பரந்தூருக்கான போக்குவரத்து உள்கட்டமைப்புகளைப் புறந்தள்ளிவிட்டு ஓசூரில் விமான நிலையம் அமைப்பதாக அமைச்சர் கீர்த்தனா கூறியிருப்பது பற்றி தெரிவித்த தொழில்துறையினர் சென்னை தான் தொழில்துறை மையம். சென்னை என்பதை அரசு ஏன் உணரவில்லை என கேள்வி எழுப்பி வருகின்றனர். இந்தியத் தொழில் கட்டமைப்பு சார்பில் தெரிவிக்கப்பட்ட கருத்தில் சென்னைக்கு மாற்று விமான நிலையம் அவசியம் என்றும், அடுத்து இரண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்குள் புதிய விமான நிலையம் உருவாக்கப்படாவிட்டால் வர்த்தகம் மற்றும் பயண நடவடிக்கைகள் பாதிக்கப்படலாம். தமிழக அரசு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக பல்வேறு நிறுவனங்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி வரும் நிலையில் போதுமான விமான நிலைய உள்கட்டமைப்பு இல்லாவிட்டால் முதலீட்டாளர்கள் ஆந்திரா கர்நாடகா தெலுங்கானா போன்ற அண்டை மாநிலங்களைத் தேர்வு செய்யக்கூடும்.

இதனால் புதிய தொழிற்சாலைகள் மட்டுமன்றி அதனுடன் உருவாகும் வேலை வாய்ப்புகள், துணைத் தொழில்கள், ஏற்றுமதி மற்றும் மாநில வருவாய் ஆகியவற்றிலும் பாதிப்பு ஏற்படக்கூடும்.

செங்கல்பட்டு திண்டிவனம் உள்ளிட்ட பகுதிகளில் விவசாய நிலங்கள் அதிகம் உள்ளதால் மீண்டும் நிலம் கையகப்படுத்தும் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது.

பெங்களூரு மற்றும் ஆந்திரா நெடுஞ்சாலை பகுதிகளிலும் தொழிற்சாலைகள் குடியிருப்புகள் அதிகரித்துள்ளதால் பெரிய அளவில் நிலம் கிடைப்பது எளிதானதாக இருக்காது. மாற்று விமான நிலையம் எங்கு அமையும் எப்போது பணிகள் தொடங்கும் எப்போது பயன்பாட்டுக்கு வரும் என்பதற்கான காலக்கெடுவை உடனடியாக அரசு அறிவிக்க வேண்டும்.

இல்லையெனில் தமிழகத்துக்கு வரவேண்டிய முதலீடுகள் அண்டை மாநிலங்களுக்குச் சென்று தொழில் வளர்ச்சியும், வேலை வாய்ப்புகளும் பாதிக்கப்படும் நிலை உருவாகும் என்றனர்.

நீலகிரி சிவகிருஷ்ணா

அச்சத்தில் வாழ்ந்து வரும் நீலகிரி மக்கள்..



அழிந்து வரும் நீலகிரி மலை மாவட்ட அழகும், இயற்கை வளங்களும்.. அதற்கு துணை போகும், உடந்தையாக இருக்கும் சில மௌன அதிகாரிகளும்.. விதிமீறல்களால் பல மலைகளைக் காணோம் என்றும், வருங்காலத்தில் ஏதாவது பேரழிவு ஏற்படுமோ என்ற அச்சத்தில் வாழ்ந்து வரும் நீலகிரி மக்கள்..

நீலகிரி மாவட்டம் பல்வேறு மலைத் தொடர்களையும், பள்ளத்தாக்குகளையும், சதுப்பு நிலங்களையும் தன்னகத்தே கொண்ட தனித்துவமான ஒரு சிறப்பான, பெருமை மிகுந்த மலை மாவட்டமாகும். இங்குள்ள ஒவ்வொரு பள்ளத்தாக்கும், இயற்கைச் சூழலுடன் நெருங்கிய தொடர்புடையதாகவும், அதன் நீரியல் சமநிலையைப் பாதுகாக்கும் முக்கியப் பங்கினை வகிப்பதாகவும் உள்ளது. குறிப்பாக, பள்ளத்தாக்குகளில் அமைந்துள்ள சதுப்பு நிலங்கள், இயற்கை நமக்கு வழங்கிய மிகப்பெரிய அரிய நீர்த்தேக்கங்களாகும், மிகப்பெரிய பொக்கிஷம் ஆகும். இவை மழைக்காலங்களில் மழைநீரைத் தேக்கி வைத்து, பின்னர் அதை நிலத்தடி நீராகவும், ஊற்றுகள் மற்றும் சிற்றாறுகளின் நீரோட்டமாகவும் நமக்கு படிப்படியாக வெளிவரும் இயற்கையான நீர்ச் சேமிப்புக் கிடங்குகளாகச் செயல்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, நீலகிரியின் நீர்வளப் பாதுகாப்பில் சதுப்பு நிலங்களுக்கு மிக முக்கியமான இடம் உண்டு என்பது காலம் காலமாக அனைவரும் அறிந்ததே.

ஆனால், நீலகிரியின் தனித்துவமான புவியியல் அமைப்பு, சுற்றுச்சூழல் முக்கியத்துவம் மற்றும் நீரியல் சமநிலை ஆகியவற்றைக் கடந்த பல காலங்களாக செயல்பட்டு வரும் நிர்வாகம், போதிய அளவில் இதன் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொள்ளாமல் மேற்கொள்ளப்பட்ட திட்டமிடப்படாத வளர்ச்சி, நிலப் பயன்பாட்டு மாற்றங்கள், கட்டுமானப் பணிகள் மற்றும் இயற்கை வளங்களின் மீதான அதிகப்படியான அழுத்தம் போன்ற செயல்பாடுகளால், மலை மாவட்டமான நீலகிரிக்கு இவை பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன எனக் கூறப்படுகிறது.

இதன் விளைவாக, கடந்த காலங்களில் நீர் வழங்கிய பல சுனைகள் வறண்டு போகும் நிலையும், சதுப்பு நிலங்கள் சுருங்கி அல்லது மறைந்து போகும் நிலையும் ஏற்பட்டுள்ளது வேதனைக்குரியதாகும். இது வெறும் சுற்றுச்சூழல் பிரச்சினை மட்டுமல்ல, எதிர்காலத்தில் நீலகிரியின் குடிநீர், விவசாயம் மற்றும் ஒட்டுமொத்த வாழ்வாதாரத்தையும் பாதிக்கக்கூடிய மிகப்பெரிய சவாலாகும் என்பதை மாவட்ட நிர்வாகம் உணர வேண்டும் என பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் கூறி வருகின்றனர்.

மேலும் மக்கள் தொகை மற்றும் கட்டுமான வளர்ச்சியை, சுற்றுச் சூழலின் தாங்கும் திறனுக்கு ஏற்ப திட்டமிடுவதில் மாவட்ட நிர்வாகத்தால் ஏற்பட்ட குறைபாடுகள், இயற்கை வளங்களின் மீதான அழுத்தத்தை அதிகரித்துள்ளன என்றும், மாவட்டத்தின் அழிவிற்கு, பேரிடர்களுக்கு பாதிப்புகளுக்கு வழி வகுக்கும் என பொதுமக்கள் வேதனையோடு தெரிவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

காடுகள், நீர்நிலைகள், மேய்ச்சல் நிலங்கள் மற்றும் பாரம்பரிய நிலப்பயன்பாடுகளுடன் இணைந்திருந்த மலை மாவட்ட மக்களின் வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாற்றங்கள், அவர்களின் பொருளாதார மற்றும் சமூக பாதுகாப்பை பாதித்துள்ளன. அதே நேரத்தில், வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் நிர்வாக முடிவுகளில் உள்ளூர் பழங்குடியின மக்களின் வரலாற்று உரிமைகள், பாரம்பரிய அறிவு மற்றும் பங்கேற்பு ஆகியவை போதிய அளவில்

கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்ற கேள்வியும் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் மத்தியில் எழுந்துள்ளது. எனவே, நீலகிரியை ஒரு சாதாரண மலை மாவட்டமாக அணுகாமல், தனித்துவமான சூழலியல், நீரியல், பண்பாட்டு மற்றும் பழங்குடியின பாரம்பரியம் கொண்ட பாதுகாக்கப்பட வேண்டிய சிறப்பு மண்டலமாகத் தமிழ்நாடு அரசும், மாவட்ட நிர்வாகமும் அணுக வேண்டியது அவசியம் என பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் கூறி வருகின்றனர்.

சமீபத்தில் குன்னூர் ஜெகதளா பேரூராட்சிக்கு உட்பட்ட பந்துமை பகுதியில், தடுப்புசுவர் அமைப்பதற்காக மலை மாவட்ட விதிகளை மீறி, அங்கு பணிபுரியும் அதிகாரிகளுடன் கைகோர்த்து, அவர்களை மவுனமாக்கி, வெடிபொருட்கள் பயண்படுத்திய போது, வெடிகள் வெடித்ததில் 2 பேர் படுகாயம் அடைந்துள்ளதாகவும், கோவை அரசு மருத்துவ மனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டதாகவும், மேலும் 10 கிலோ வெடிபொருட்கள் வெடிக்காமல் ஆபத்தான நிலையில் அங்கு வைத்துள்ளதாகவும், அதனால் கோவையில் இருந்து வெடிகுண்டு நிபுணர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்பட்டது அனைவரும் அறிந்ததே. மேலும் இது குறித்து காவல்துறை தீவிர விசாரனை நடத்தி வருவதாக கூறப்பட்டது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு ஒரு புறம் பண முதலைகள் விதிமுறைகளை மீறி செயல்படுகின்றனர்.

ஆனால் இங்கு மண்ணின் மைந்தர்களாக விளங்கும் பொதுமக்கள், ஒரு வீடு கட்டுவதற்கு பல கட்டுப்பாடுகளைக் கூறி வருகின்றனர் என்ற கேள்வி பொதுமக்களிடையே எழுந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

பாரம்பரிய பூர்வீகக் கோயில்களின் அருகில் உள்ள, சிறு கல்லை உடைக்க பல நூறு கேள்விகளைப் கேட்டு, உத்தரவை நிராகரித்த, சில அதிகாரிகளும், மாவட்ட நிர்வாகமும், சில பண முதலைகள் மட்டும் விதிமுறைகளை மீறி, கற்களை வெடி வைத்து தகர்க்க அனுமதி அளித்ததா? அதை எப்படி வேடிக்கைப் பார்க்கிறது என்ற பல கேள்விகளைப் பொதுமக்கள் மனக்குமரலோடு கேட்டு வருகின்றனர்.

நீலகிரியின் எதிர்கால வளர்ச்சி என்பது இயற்கையை அழித்து மேற்கொள்ளப்படும் வளர்ச்சியாக இருக்கக் கூடாது என பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் மனக்குமுறலோடு கூறி வருகின்றனர். மாறாக, சதுப்பு நிலங்களைப் பாதுகாத்தல், நீர்ப்பிடிப்பு பகுதிகளை மீட்டெடுத்தல், சுனைகள் மற்றும் இயற்கை நீரோடைகளைப் பாதுகாத்தல், கட்டுப்பாடற்ற கட்டுமானங்களை ஒழுங்குபடுத்துதல், கட்டுப்பாடு அற்ற கட்டுமானங்களுக்கு உடந்தையாகச் செயல்படும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்தல், மக்கள் தொகை மற்றும் நிலப்பயன்பாட்டை அறிவியல் அடிப்படையில் திட்டமிடுதல், மேலும் பழங்குடியின மக்களின் பாரம்பரிய வாழ்வாதார உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றை மையமாகக் கொண்ட நிலையான வளர்ச்சியாக இருக்க வேண்டும் என பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் ஆதங்கத்தோடு கூறி வருகின்றனர்.

நீலகிரியின் இயற்கை வளங்களைப் பாதுகாப்பது என்பது வெறும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அல்ல, அது நீலகிரியின் எதிர்கால தலைமுறைகளின் வாழ்வுரிமையையும், பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாப்பதாகும். எனவே நீலகிரி மாவட்ட நிர்வாகம் இங்கு நடக்கும் விதிமீறல் கட்டிடங்களையும், இங்கு பல தேயிலை தோட்டங்களில், திடீர் திடீரென முளைக்கும் விதிமுறைகளை மீறிய சாலைகளையும் விசாரிக்க வேண்டும், மேலும், இங்கு பல தனியார் ரிசார்ட்டுகள், பங்களாக்கள் விதிமுறைகளை மீறி, அனுமதி இன்றி, அல்லது அனுமதிக்கப்பட்ட அளவைவிட கட்டுவதற்கு, உடந்தையாகச் செயல்படும் சில கிராம நிர்வாக அதிகாரிகள், சில வருவாய் அதிகாரிகள் ஆகியோர் நடக்கும் முறைகேடுகளைத் தெரிந்தும் தெரியாதது போல நடித்து வேடிக்கை பார்ப்பதை, மாவட்ட நிர்வாகம் இனிமேல் கண்டு நிறுத்த வேண்டும் எனவும், இல்லையென்றால் இந்த இயற்கையை அழிக்கும் அவர்களின் குடும்பத்திற்கு, பல ஜென்மங்களுக்கு, அந்த இயற்கை அன்னை பாதிப்பைக் கண்டிப்பாக ஏற்படுத்துவார் என, பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும், சுற்றுச்சூழல் பாதுகாப்பாளர்களும் மனக்குமுறலோடு, தெரிவித்து வருகின்றனர்.

சமீபத்தில் நடந்த வெடி விபத்திற்கும் கூட, சில அதிகாரிகள் கண்டிப்பாக உடந்தையாகச் செயல்பட்டு இருக்கலாம் எனவும், நேபாளத்தில் நடந்ததை போல, வரும் காலங்களில் நீலகிரிக்கு பேரழிவு ஏற்பட வாய்ப்புள்ளது எனவும், உடந்தையாக இருக்கும் அந்த சில அதிகாரிகள், வருங்கால மலை மாவட்ட மக்களின் நலனைக் கருதி, இவ்வாறு செயல்படும் விதிமீறல்களுக்கு துணை போவதை தடுக்கவும், விதிமுறைகளுக்கு உடந்தையாக இருப்பவர்கள் மீது மாவட்ட நிர்வாகம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க தவறும் பட்சத்தில், மாநில நிர்வாகம் தகுந்த ஆய்வுகள் மேற்கொண்டு, நீலகிரி மாவட்டத்தில் நடக்கும் விதிமீறல்களை உடனடியாகத் தடுக்க நடவடிக்கை எடுத்து, நீலகிரியில் வருங்கால சந்ததிகள் சிறப்பாக வாழ, பாதுகாப்பாக வாழ, அச்சமின்றி வாழ தகுந்த நடவடிக்கைகளை, துரித நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் சார்பாக வேண்டுகோள் வைக்கப்படுவதாக கூறப்படுகிறது.

பல துறைகளில் உள்ள சில அதிகாரிகள், அல்பத்தனமான ஆசைகளுக்கு மயங்கி, அத்துமீறல்களுக்கும், விதி மீறல்களுக்கும் உடந்தையாகச் செயல்பட்டு, நீலகிரி மாவட்டத்தின் அழகையும், சிறப்பையும் சீரழித்து விட்டார்கள் எனவும், இனி மேற்கொண்டு இவ்வாறு செயல்களில் செயல்பட்டால், அவர்களை அந்த ஆண்டவன் நிச்சயம் சும்மா விட மாட்டார். அந்த ஆண்டவன் பார்த்துக் கொள்ளட்டும் எனவும், நீலகிரியை பல வகைகளில் சீரழிக்கும் சில சதிகாரர்களை, சில உடந்தை அதிகாரிகளை, பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் மனக்குமுறலோடு சபித்து வருவார்கள் என்பதும் நிதர்சனமான உண்மையே.



ஆசிரியர்

சிங்கம்புணரி காவல் ஆய்வாளர், தலைமைக் காவலர் பணியிடை நீக்கம் செய்த மணிவண்ணன் IPS-DIG



சிவகங்கை மாவட்டம் நெற்குப்பை அருகே ஆத்திகாடு பகுதியைச் சேர்ந்தவர் நெடுஞ்செழியன் (45). இவர் சிங்கம்புணரியில் 'புத்தூர்கட்டு பாண்டி' என்ற பெயரில் எலும்பு முறிவு, முடக்குவாதம் உள்ளிட்ட பாதிப்புகளுக்கு சிகிச்சை அளித்து வந்தார். சமூக வலைதளங்களில் பிரபலமடைந்ததால் தமிழகம் மட்டுமின்றி கர்நாடகம் உள்ளிட்ட பிற மாநிலங்களில் இருந்தும் ஏராளமானோர் அவரிடம் சிகிச்சைக்காக வந்ததாகக் கூறப்படுகிறது. இந்நிலையில், முறையான மருத்துவக் கல்விச் சான்றிதழ் இல்லை என இணை இயக்குநர் அளித்த புகாரின் பேரில், கடந்த ஜனவரி மாதம் சிங்கம்புணரி போலீசார் நெடுஞ்செழியனை கைது செய்து, அவரது மருத்துவமனைக்கு சீல் வைத்தனர். பின்னர் ஜாமீனில் வெளியே வந்த அவர், தனது தோப்பில் 'செம்புவேல் முருகன்' என்ற பெயரில் கோயில் அமைத்து அங்கு சிகிச்சை அளித்து வந்ததாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையே, நெடுஞ்செழியன் சமூக வலைதளங்களில் வெளியிட்ட வீடியோவில், தற்போது சிங்கம்புணரி காவல் ஆய்வாளராகப் பணியாற்றி வரும் சீனிபாபு மாதந்தோறும் பணம் கேட்டு தொல்லை கொடுப்பதாகவும், பணம் கொடுக்காவிட்டால் பொய் வழக்கு பதிவு செய்வதாக மிரட்டுவதாகவும் குற்றம் சாட்டியிருந்தார்.மேலும், சிங்கம்புணரி காவல் நிலையத்தில் முன்பு பணியாற்றிய அதிகாரி ஒருவருக்கு பணம் பெற்றுக் கொடுத்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பான சிசிடிவி காட்சியையும் அவர் வெளியிட்டிருந்தார். இந்த வீடியோ மற்றும் ஆடியோ பதிவுகள் சமூக வலைதளங்களில் பரவியதைத் தொடர்ந்து, ராமநாதபுரம் சரக டிஐஜி மணிவண்ணன் விசாரணை மேற்கொண்டார். கடந்த ஏப்ரல் மாதம் முன்னாள் காவல் ஆய்வாளருக்கு பணம் பெற்றுக் கொடுத்ததாகக் கூறப்படும் புகார் தொடர்பாக தலைமைக் காவலர் ஜெயராஜிடமும் விசாரணை நடத்தப்பட்டது.

விசாரணையின் அடிப்படையில், சிங்கம்புணரி காவல் ஆய்வாளர் சீனிபாபு மற்றும் தலைமைக் காவலர் ஜெயராஜ் ஆகிய இருவரையும் தற்காலிக பணியிடை நீக்கம் செய்து டிஐஜி மணிவண்ணன் உத்தரவிட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

விழுப்புரம் தில்லை காமராஜ்







திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட சுற்றுவட்டார கிராமங்களில் வண்டல் மண் மாஃபியாக்களுக்கு துணை போகும் பொதுப்பணித்துறை அதிகாரிகள்...

மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா...?

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சுற்றுவட்டார கிராமங்களில் உள்ள விவசாய நிலத்தின் சிட்டா அடங்கல் மூலம் பர்மிட் என்ற பெயரில் தனிநபர் டிராக்டர்களை வைத்துக் கொண்டு ஏரிகளில் 5 அடிக்கு மேலாக ஆழம் எடுத்து கிராவல் மண் அடித்து வருகின்றனர். இந்த கிராவல் மண் வீடு கட்டுவதற்கும், செங்கல் சூளைக்கும், பெட்ரோல் பங்க், திருமண மண்டபம், கடைகள், வீடுகள்,புதிய மனை பட்டா போடும் இடங்கள் மற்றும் புறம்போக்கு இடங்களில் கிராவல் மண் கொட்டி ஆக்கிரமிப்பு செய்து வருகின்றன. டிராக்டர் மூலம் அடிக்கப்படுகின்ற கிராவல் மண் விவசாய நிலத்திற்கு செல்லாமல் தனிநபர் லாபத்திற்கு மட்டுமே விற்பனைச் செய்து வருகின்றனர். சிலர் வேறு ஒருவர் நிலத்தின் ஆவணங்களை புரோக்கர் பெற்றுக் கொண்டு பதிவு செய்து வண்டல் மண் அடிப்பதில் ஈடுபட்டு வருகின்றனர். புரோக்கர்கள் கொடுக்கும் பணத்திற்கு அதிகாரிகள் துணை போகிறார்களா ஆனால் விவசாய நிலத்திற்கு வண்டல் மண் அடிப்பதாக பர்மிட் போட்டு இத்தகைய தவறான வழியில் பணம் சம்பாதிக்கும் நோக்கத்தோடு தனிநபர்கள் கிராவல் மண் எடுத்து வருகின்றனர். இதனால் விவசாயத்திற்கு எந்த பயனும் இல்லை. பொதுப்பணித்துறை அதிகாரிகளும் மண் புரோக்கர்களும் கைகோர்த்துக்கொண்டு கிராவல் மண் கொள்ளையில் ஈடுபட்டு வருகின்றனர். விவசாய நிலத்தின் சிட்டா அடங்கல் கொடுத்து பர்மிட் போடும் சர்வே எண்ணில் வண்டல் மண் அடிக்கப்படுகிறதா..... இதற்கான புகைப்படம் பொதுப்பணித்துறை அதிகாரிகள் யாராவது வெளியிட முடியுமா.? ஏரியில் ஆழமான பள்ளம் எடுப்பதனால் மழைக்காலங்களில் மனிதர்கள் கால்நடைகள் போன்றவைகள் ஆழம் தெரியாமல் அந்த இடத்தில் சிக்கி உயிரிழக்கும் சூழல் ஏற்படும்.

இதனால் ஏரியில் எடுக்கப்படுகின்ற வண்டல் மண் விவசாய நிலத்திற்கு தான் அடிக்கப்படுகிறதா என அதிகாரிகள் நேரில் சென்று இதுவரை ஆய்வு செய்தது உண்டா...? இது சம்பந்தமாக மாவட்ட நிர்வாகம் தனிக்குழு அமைத்து இதற்கு முன்பு மண் அடிப்பதற்கு கொடுத்த பர்மிட் வண்டல் மண் எங்கே சென்றது. புரோக்கர்கள் கொடுக்கும் அந்தந்த சர்வை எண்ணில் உள்ள நிலத்தில் தான் வண்டல் மண் அடிக்கப்பட்டுள்ளதா . . . . . ? என்று வெளிப்படைத்தன்மையுடன் ஆய்வு செய்து அறிக்கை வெளியிட வேண்டும் என பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



சட்ட ஆலோசகர் பிரபு அரசு

ஜேப்பியார் நிலத்தை கஷ்டப்பட்டு மீட்ட திமுக..

கட்ட இருந்த ஸ்போர்ட்ஸ் சிட்டியை ரத்து செய்த விஜய் அரசு.

சென்னை பழைய மகாபலிபுரம் சாலையில் உள்ள செம்மஞ்சேரியில், பல ஆண்டு போராட்டத்திற்குப் பின் மீட்கப்பட்ட சுமார் ₹2,000 கோடி மதிப்பிலான அரசு நிலத்தில் பிரம்மாண்டமாகத் திட்டமிடப்பட்ட சென்னை சர்வதேச விளையாட்டு நகரம் பணிகளுக்கான ஒப்பந்தத்தை தவெக அரசு ரத்து செய்துள்ளது.

20 ஆண்டுகால ஆக்கிரமிப்பும் திமுக அரசின் நில மீட்பும்

செம்மஞ்சேரியில் உள்ள 91.4 ஏக்கர் அரசு மானாவாரி புறம்போக்கு நிலம், 1990களில் இருந்து ஜேப்பியார் கல்வி அறக்கட்டளையின் ஆக்கிரமிப்பில் இருந்து வந்தது. கல்வி நிறுவன வளாகங்கள், விடுதிகள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் அந்த நிலத்தில் கட்டப்பட்டிருந்தன. நிலத்தை முறைப்படுத்தித் தருமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைகளை அரசு நிராகரித்ததைத் தொடர்ந்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் அடுத்தடுத்து வழக்குகள் தொடரப்பட்டு சுமார் 20 ஆண்டுகள் சட்டப் போராட்டம் நீடித்தது.

2021ல் திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, ஆக்கிரமிக்கப்பட்ட அரசு நிலங்களை மீட்கும் தீவிர நடவடிக்கை தொடங்கப்பட்டது. நீதிமன்றத் தடைகள் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, 2021 செப்டம்பர் மாதம் வருவாய்த் துறை மற்றும் காவல் துறையினர் ஒருங்கிணைந்து அதிரடி கள நடவடிக்கை மேற்கொண்டனர். ஆக்கிரமிக்கப்பட்ட கட்டடங்கள் மற்றும் எல்லைகள் சீல் வைக்கப்பட்டு, அரசுக்குச் சொந்தமான 91.4 ஏக்கர் நிலம் அதிகாரப்பூர்வமாக மீட்கப்பட்டது. பின்னர் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் இணைக்கப்பட்டு, மொத்த நிலப்பரப்பு 112 ஏக்கராக விரிவுபடுத்தப்பட்டது.

திமுக அரசின் மெகா ஸ்போர்ட்ஸ் சிட்டி திட்டம்

மீட்கப்பட்ட இந்த 112 ஏக்கர் பரப்பளவில் ஒலிம்பிக் மற்றும் சர்வதேசத் தரத்திலான விளையாட்டு உட்கட்டமைப்பை உருவாக்க திமுக அரசு முடிவு செய்தது. இந்தியாவில் ஒரு விளையாட்டு வளாகத்திற்குள் முதன்முறையாக 1 கிலோமீட்டர் நீளமும் 13 மீட்டர் அகலமும் கொண்ட சர்வதேச படகோட்டம் மற்றும் நீர் விளையாட்டுத் தடம் அமைக்கத் திட்டம் வகுக்கப்பட்டது. நவீன உள்விளையாட்டு அரங்கங்கள், தடகள மைதானங்கள், விளையாட்டு வீரர்களுக்கான தங்கும் விடுதிகள் மற்றும் மெட்ரோ ரயில் இணைப்பு வசதியுடன் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டது. முதற்கட்டப் பணிகளுக்காக ₹205.89 கோடி மதிப்பிலான கட்டுமான ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு, ஆர்.பி.பி இன்ப்ரா ப்ராஜெக்ட்ஸ் நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டது. களத்தில் மண் பரிசோதனை, நிலத்தைச் சமன்படுத்துதல் உள்ளிட்ட ஆரம்பகட்டப் பணிகள் தொடங்கப்பட்டன.

பணி ஆணையை ரத்து செய்த தவெக அரசு பின்னணி என்ன?

தமிழகத்தில் தவெக ஆட்சி அமைந்ததைத் தொடர்ந்து, முந்தைய ஆட்சியில் தொடங்கப்பட்ட மற்றும் ஒப்பந்தம் கோரப்பட்ட முக்கிய பெருந்திட்டங்கள், நிதி ஒதுக்கீடுகள் மற்றும் ஒப்பந்தப் புள்ளிகள் குறித்து விரிவான மறுஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த மறுஆய்வுக்

கூட்டத்தில், தற்போதுள்ள முதற்கட்ட வடிவமைப்பு எதிர்காலத்தில் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் அல்லது காமன்வெல்த் போட்டிகள் போன்ற மெகா சர்வதேச நிகழ்வுகளை நடத்துவதற்குப் போதுமானதாக இருக்காது எனக் கருதப்பட்டது. 112 ஏக்கர் நிலப்பரப்பை முழுமையாகப் பயன்படுத்தி, மேலும் பிரம்மாண்டமான ஒருங்கிணைந்த சர்வதேச விளையாட்டு வளாகமாக இதை மாற்றி வடிவமைக்க அரசு முடிவு செய்தது. இதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ஒப்பந்த விதிகளின்படி ஆர்.பி.பி இன்ப்ரா நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி ஆணையை உடனடியாக ரத்து செய்து, களப் பணிகளை நிறுத்துமாறு உத்தரவிட்டது.

அடுத்த கட்ட நகர்வு பணி ஆணை ரத்து செய்யப்பட்டது குறித்து ஆர்.பி.பி இன்ப்ரா நிறுவனம் பங்குச் சந்தைக்குத் தகவல் தெரிவித்துள்ளது. தொடக்கப் பணிகளுக்காகக் கணிசமான தொகையை ஏற்கனவே செலவிட்டுள்ளதால், அரசின் இந்த உத்தரவால் ஏற்பட்டுள்ள நிதித் தாக்கம் மற்றும் ஒப்பந்த விதிகளின் அடிப்படையிலான அடுத்தகட்ட சட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து வருவதாக அந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

அரசுத் தரப்பில் சர்வதேசத் தரத்திற்கு ஏற்ப விரிவான புதிய திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, அதன்பின்னர் திருத்தப்பட்ட புதிய டெண்டர் கோரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆசிரியர்

தமிழக ஆளுநருக்கு புதிய பாதுகாப்பு அதிகாரியாக டாக்டர் V.பிரசன்ன குமார் ஐபிஎஸ் நியமனம்



தமிழகத்தின் பொறுப்பு ஆளுநராக உள்ள ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகரின்தனி பாதுகாப்பு அதிகாரியாக (எஸ் பி)ரகுபதி ஐபிஎஸ் பணியாற்றி வந்தார். தற்பொழுது அவர் மாற்றப்பட்டு புதிய பாதுகாப்பு அதிகாரியாக டாக்டர் V .பிரசன்னகுமார் ஐபிஎஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை உள்துறை செயலாளர் திருமணிவாசன் பிறப்பித்துள்ளார்.டாக்டர் பிரசன்னா குமார் ஐபிஎஸ் 2021 ஆம் ஆண்டு பேட்ச் தமிழ்நாடு பிரிவு இந்திய காவல் பணி (IPS) அதிகாரி ஆவார்.

புதுச்சேரியில் பிறந்த அவர் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் (MBBS)பட்டம் பெற்றுள்ளார். திருநெல்வேலி மாவட்டத்தின் நான்கு இறுதி நெறி நாங்குநேரி உதவி காவல் கண்காணிப்பாளராகவும்(ASP) திருநெல்வேலி மாநகர துணை ஆணையராகவும் பணியாற்றினார். நாங்குநேரியில் உதவி காவல் கண்காணிப்பாளராகப் பணியாற்றிய போது அந்தப் பகுதி இளைஞர்களின் மேம்பாட்டிற்காக பல நலத்திட்டங்களைக் கொண்டு வந்தார். அந்தத் திட்டங்கள் மக்கள் மத்தியில் மிகவும் பாராட்டப்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தின் காவல் கண்காணிப்பாளராக ஜனவரி 2026 ல் பொறுப்பேற்றார். இவர் தனது பணிக்காலத்தில் பல்வேறு நலத்திட்டங்களைக் கொண்டு வந்து பணியாற்றினார். இந்நிலையில் கடந்த மாதம் திருநெல்வேலி காவல் கண்காணிப்பாளர் பதவியில் இருந்து மாற்றப்பட்டார். தற்பொழுது கவர்னரின் முதன்மை பாதுகாப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர்களுக்கு காவல்துறை அதிகாரிகள், முக்கிய பிரமுகர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களோடு சேர்ந்து நமது விஜிலென்ஸ் இதழ் விஜிலென்ஸ் டிவி, விஜிலென்ஸ் மக்கள் இயக்கம் மற்றும் விஜிலென்ஸ் கல்வி அறக்கட்டளை சார்பில் மனமார்ந்த நல் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

இளம் வயதில் சாதனைப் புத்தகத்தில் தன் பெயரைப் பதித்த ஆறு வயது சிறுமி கனிஷ்கா..



சேலம் மாவட்டம் அனுப்பூர் மேல காட்டைச் சேர்ந்த P.பிரபு பிரியங்கா தம்பதிகளின் மூத்த மகளான ஆறு வயது சிறுமி கனிஷ்கா தனது இளம் வயதிலேயே சாதனைப் புத்தகத்தில் தன் பெயரைப் பதித்துள்ளார் என்றால் அது மிகையே அல்ல.

பிரபு பிரியங்கா தம்பதிகள் தற்போது சேலம் மாவட்டம் ஓமலூர் கருப்பூரில் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு ஆறு வயதான கனிஷ்கா என்ற மகளும், இரண்டரை வயதான ஒரு மகனும் இருக்கிறார்கள். செல்வி கனிஷ்கா கோல்டன் ஸ்பார்க் மெட்ரிகுலேஷன் உயர்நிலைப் பள்ளியில் இரண்டாம் வகுப்பு படித்து வருகிறார். செல்வி கனிஷ்கா சிறுவயதிலிருந்தே மிகவும் சுட்டித்தனமாகவும், சுறுசுறுப்பாகவும், புத்திசாலித்தனமாகவும் திகழ்வார்.

இந்த சுட்டித்தனத்தையும் சுறுசுறுப்பையும் புத்திசாலித்தனத்தையும் செல்வி கனிஷ்காவின் பெற்றோர்கள் அறிவுப்பூர்வமாக மாற்ற எண்ணி உள்ளனர். அச்சமயத்தில் இவர்களின் நண்பரான சத்யானந்தன் தன்னுடைய நண்பனான அனந்த நாராயணன் என்பவரை அறிமுகம் படுத்தினார். குழந்தையின் திறமையைக் கண்ட அனந்த நாராயணன் குழந்தைக்கு முறையான பயிற்சி அளித்து அறிவு சார்ந்த விஷயங்களைக் கற்றுக் கொடுத்துள்ளார். குழந்தை கனிஷ்காவும் அனந்த நாராயணன் சொல்லிக் கொடுக்கும் அறிவு சார்ந்த விஷயங்கள் அனைத்தையும் கற்றுக் கொண்டு திறமையை வெளிப்படுத்தத் தொடங்கினார். இதைக் கண்ட அனந்த நாராயணன் டிரம்ப் உலக சாதனைப் புத்தகத்தில் சாதனைப் புரிய வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

குழந்தை கனிஷ்கா 35 கண்டுபிடிப்பாளர்களின் பெயர்கள், 56 தமிழ்நாட்டில் உள்ள ஊர்களின் சிறப்புகள், ஏழு கண்டங்கள், 5 பஞ்சபாண்டவர்களின் பெயர்கள், ஏழு வானவில் நிறங்கள், 28 மாநிலங்கள் அதன் தலைநகரங்கள், ஒரு யூனியன் பிரதேசம் என பல தலைப்புகளுக்கு சற்றும் பிழையின்றி மூன்று நிமிடம் 35 நொடிகளில் பதில் அளித்து பிரமிக்க வைக்கும் சாதனையைத் தனது ஆறு வயதில் குழந்தை கனிஷ்கா சாதனைப் படைத்து காட்டியுள்ளார் என்றால் அது மிகையே அல்ல.

கடந்த 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23ஆம் தேதி எங்களுடைய நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழின் 15 ஆம் ஆண்டுத் தொடக்க விழா, 2026 ஆம் ஆண்டிற்கான சாதனையாளர்கள் விருது வழங்கும் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவான விஜிலென்ஸ் முப்பெரும் விழாவில் சென்னை அம்பத்தூர் ஆவடி போலீஸ் கமிஷனரேட் காவல் துறை இணை ஆணையர் காக்கியின்

கம்பன், நேர்மையின் சிகரம், வடுகம், டாக்டர் இரா. சிவகுமார் ஐபிஎஸ், டி ஐ ஜி, சென்னை கடலோர காவல் படை காவல்துறை துணைத் தலைவர் அன்பின் உருவம், நேர்மையின் சிகரம் D. மகேஷ் குமார் ஐபிஎஸ், டி ஐ ஜி, திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் அன்பின் அடையாளம் பா.விஜயராஜ் எம் எல் ஏ, குட்டிப்புலி படப் புகழ் பிரபல வெள்ளித்திரை நடிகர், இயக்குனர் M.ராஜாசிங், சென்னை நடன கலைஞர் திரைப்பட தயாரிப்பாளர் இயக்குனர் நடிகர் M.ராஜேஷ் கண்ணா,தெய்வமகள் புகழ் வெள்ளித் திரை / சின்னத்திரை பிரபல நடிகர் R. அரவிந்த் மோதிலால் காதரே மற்றும் தெய்வமகள் புகழ் வெள்ளித் திரை / சின்னத்திரை பிரபல நடிகர் பிரகாஷ் ராஜன் ஆகியோர்களின் பொற்கரங்களால் குழந்தை கனிஷ்காவின் சாதனையைப் பாராட்டி குழந்தை கனிஷ்காவிற்கு 2026 ஆம் ஆண்டிற்கான நமது விஜிலென்ஸ் இளம் சாதனையாளர் விருதும், பதக்கமும் மற்றும் நற்சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

குழந்தை கனிஷ்காவின் சாதனைகள் இதோடு நின்று விடாமல், இன்னும் நிறைய சாதனைகளைப் படைக்க வேண்டும். அதோடு மட்டுமல்லாமல் சாதனைப் பட்டியல்கள் மென்மேலும் தொடர்ந்து கொண்டே இருக்க எங்களுடைய நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழ், விஜிலென்ஸ் டிவி விஜிலென்ஸ் மக்கள் இயக்கம் மற்றும் விஜிலென்ஸ் கல்வி அறக்கட்டளை சார்பில் மனமார்ந்த நல்வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

சாதனைக் குழந்தை கனிஷ்காவிற்கு எங்களுடைய விஜிலென்ஸ் குடும்பத்தின் சார்பில் மிகப் பெரிய ராயல் சல்யூட்..

குறிப்பு :

குழந்தை கனிஷ்கா சாதனைப் படைக்க காரணமாக இருந்த அனந்த நாராயணன் வேறு யாரும் இல்லை. இவர் சாதனைக் குழந்தை ஜெய் சுதனின் தந்தை. தனது குழந்தையான ஜெய் சுதனுக்கு குழந்தை பருவத்திலேயே பல்வேறு வகையான அறிவுப்பூர்வமான விஷயங்களைக் கற்றுக் கொடுத்து அவனையும் சாதனைப் படைக்க செய்துள்ளார்கள் ஜெய் சுதனின் பெற்றோர்கள் என்றால் அது மிகையே அல்ல. தன் குழந்தைக்கு மட்டும் திறமையை வெளிக் கொண்டு வர வேண்டும் என்று நினைக்காமல் தன்னை சுற்றியுள்ள தனக்குத் தெரிந்த உற்றார் உறவினர்கள் நண்பர்களின் குழந்தைகளுக்கும் அனந்த நாராயணன் தன்னால் முடிந்த அறிவு சார்ந்த தகவல்களைக் கற்றுக் கொடுத்து பல்வேறு குழந்தைகளைச் சாதனைப் படைக்கச் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.அனந்த நாராயணனுக்கும், லட்சுமி கல்பனா அனந்த நாராயணனுக்கும் எங்களுடைய விஜிலென்ஸ் குடும்பத்தின் சார்பில் மிகப் பெரிய ராயல் சல்யூட்..









கோபி குமார்



மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பார்களா எம்எல்ஏக்கள்?.

வசதிகளுக்கு பஞ்சமில்லை என்ற நிலையில் நமது சட்டமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலானோர் இருக்கிறார்கள் என்பது தான் உண்மை. ஆனால் புதிதாக நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் தற்போதைய தமிழக வெற்றிக்கழக அரசியல் எம்எல்ஏக்களாக உள்ளனர். அதில் சிலருக்கு வாகன வசதி இல்லாமல் இருக்கிறார்கள். முந்தைய காலகட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளாக இருந்தவர்கள் முழுக்க முழுக்க மக்களுடனேயே தங்கள் முழு நேரத்தையும் செலவிட்டு வந்தார்கள். அதைத்தவிர வேறு எந்த தொழிலும் அவர்களுக்கு இருந்ததில்லை. அதனால்தான் அவர்களுக்கு ரயிலில் இலவச பயணம், பேருந்து பயணம், ஓய்வூதியம் என்று எல்லாம் முந்தைய அரசுகள் வழங்கி பாதுகாத்துள்ளன. அரசு வழங்கும் தொகைக்குள்ளேயே தங்கள் செலவுகளையும் சுருக்கி கொண்டு வாழ பழகி இருந்தார்கள். இது வரலாற்றில் நாம் படித்து தெரிந்து கொண்டோம். அதற்காக இந்த காலத்திலும் அப்படி தான் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. சூழ்நிலைகள் மாறிவிட்டது. இருப்பினும் மக்கள் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் மக்களுக்குப் பணி செய்வதற்குச் சிரமப்படக் கூடாது. எளிதாக அவர்களைச் சென்று பார்க்க வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தின் அடிப்படையில் அவர்களின் கோரிக்கையை ஏற்று தமிழக முதலமைச்சர், எம்எல்ஏக்களுக்கு கார் வழங்கும் திட்டத்தை அறிவித்து உள்ளார்.

எம்எல்ஏக்களுக்கு கார் மட்டும் வழங்கவில்லை.



அதற்கு பெட்ரோல் மற்றும் இதர செலவுகளுக்காக மாதம் 25 ஆயிரம் பணமும் உதவியாளருக்கு 25 ஆயிரம் சம்பளமும் என்று மக்கள் பணிக்கு பரிசாக சலுகைகளை வாரி வழங்கி இருக்கிறார். இதற்கு முக்கியமாக இன்னொரு எண்ணமும் அவர் மனதில் இருந்திருக்கும். பழைய ஆட்சிகளை மிஞ்சும் வகையில் தனது ஆட்சி சிறக்க வேண்டும் என்று நினைத்து இருப்பார் அதன் அடிப்படையில் தான் இந்த வசதிகளை செய்து கொடுத்து வேலை வாங்கிய திட்டமிட்டு இருப்பார்.

ஒவ்வொரு எம் எல் ஏவுக்கும் மாத சம்பளம் சுமார் ஒரு லட்சம் மற்றும் வாகன செலவு உதவியாளர் படி, பயணப்படி என்று எடுத்துக் கொண்டால் 234 எம்எல்ஏக்களுக்கும் அரசு

அறிவித்துள்ள விதிகளின்படி மட்டும் சுமார் 30 கோடி செலவு செய்யப்படுகிறது. இவை அனைத்தும் மக்கள் தங்களுக்காக சேவை செய்ய தேர்வு செய்த மக்கள் பிரதிநிதிகளுக்கு அவர்கள் முகம் உகந்து வழங்குவது, தொலைபேசி வசதி, வீடு, மருத்துவ செலவு, ஓய்வூதியம், முன்னாள் எம்எல்ஏவாக மாறிய பிறகும் சலுகைகள் என்று வாழ்க்கையில் எந்த கஷ்டத்தையும் அனுபவிக்க தேவையில்லை என்ற அளவுக்கு அரசு வசதிகளை செய்து கொடுத்துள்ளது.

தமிழகம் முழுவதிலும் இருந்து வருகின்ற ஒவ்வொரு எம்எல்ஏக்களுக்கும் நல்ல வசதியான வீடும் சென்னையில் ஒதுக்கப்பட்டுள்ளது. இதை ஒவ்வொரு மக்கள் பிரதிநிதியும் மனதில் கொண்டு தங்கள் பணிகளைத் தொடர வேண்டும். மக்கள் எதிர்பார்ப்பது ஒன்றே ஒன்றுதான். தங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். எல்லா வசதிகளையும் பெற்றுள்ள எம்எல்ஏக்கள் இனி கவலைப்படாமல் அவரவர் தொகுதியில் மக்கள் முன்னேற்றம், வளர்ச்சிக்காக திட்டப்பணிகளைத் தீட்டி அவற்றை நிறைவேற்ற வேண்டும். தேர்தல் சமயத்தில் மட்டும் எப்படி எம்எல்ஏக்கள் தங்கள் தொகுதி முழுவதும் சுற்றி வந்து வாக்குகள் கேட்கிறார்களோ? அதுபோல இனி தொகுதி முழுவதும் சுற்றி வந்து மக்கள் பிரச்சினைகளை நேரில் கேட்டறிந்து அவற்றை நிறைவேற்றி தர வேண்டிய பொறுப்பு உண்டு.

தொகுதி முழுவதும் உள்ள மக்களின் அடிப்படை பிரச்சனைகளைத் தங்கள் விரல் நுனியில் வைத்திருக்க வேண்டும். இதுதான் கர்மவீரர் காமராஜர் மக்கள் பிரதிநிதிகளுக்குத் தனது அனுபவத்தின் மூலம் சொல்லிக் கொடுத்த அடிப்படை பாடம். அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஒவ்வொருவரும் தங்கள் தொகுதியில் குறைகளே இல்லை என்று மக்கள் சொல்லும் அளவுக்கு இருக்க வேண்டும். செய்வார்களா அனைத்து வசதிகளையும் பெற்றுக் கொண்ட நம் சட்டமன்ற உறுப்பினர்கள்?.. பொறுத்திருந்து பார்ப்போம் மக்களுக்கு நல்லது நடக்குதா என்று.



கடலூர் சுரேஷ்

தமிழகம் முழுவதும் E-Challan அபராதம் என்ற பெயரில் புதிய வகை சைபர் மோசடி அரங்கேறி வருகிறது.

091008 25672 உள்ளிட்ட தனிநபர் எண்களில் இருந்து **"Your cctvE-Challan CH2100039080 is pending, pay within 24 hours or legal action"** என்றும், **http://tinyurl.com** போன்ற போலி லிங்கை இணைத்தும் SMS அனுப்பப்படுகிறது.

ஏர்டெல் நிறுவனமே இந்த எண்களை **"Airtel Warning: Spam"** என அடையாளம் காட்டுகிறது. அந்த லிங்கைக் கிளிக் செய்தால் போலி அரசு இணையதளம் போல் தோன்றும் பக்கத்தில் வங்கி விவரங்களைக் கேட்டு பணம் திருடப்படுகிறது.

பொதுமக்கள் கவனத்திற்கு :

1. காவல்துறை ஒருபோதும் **http://tinyurl.com** போன்ற குறுகிய லிங்கில் Challan அனுப்பாது. அதிகாரப்பூர்வ தளம் **https://echallan.parivahan.gov.in** மட்டுமே.

2. Challan சந்தேகம் இருந்தால் நேரடியாக அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வாகன எண்ணை பதிவிட்டு சரிபார்க்கவும்.



3. இது போன்ற சந்தேகத்திற்கிடமான லிங்கைக் கிளிக் செய்ய வேண்டாம்.

4. இது போன்ற SMS வந்தால் 1930 என்ற சைபர் கிரைம் எண்ணுக்கு புகார் அளிக்கலாம்.

பத்திரிகையாளர்கள், சமூக ஆர்வலர்கள் இது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என காவல்துறை தெரிவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



ஆசிரியர் / திண்டுக்கல் பாலமுருகன்

காக்கியின் சிங்கம், காவல்துறையின் தங்கம், ஹானஸ்ட் Dr.V. சசிமோகன் IPS., DIG.,

கள்வன் பெரியதா காப்பவன் பெரியதா என்ற பழமொழி ஆன்றோர் முதுமொழி. அதற்கு மாறாக காப்பவன் தான் பெரிது என்று மாற்றிக் கூறலாம். மக்கள் பணியே மகேசன் பணி. பொது மக்களைக் காக்கும் பணியே தலைசிறந்தது என்பது இவரது புது மொழியாகும்.

"குற்றமே காக்க பொருளாக குற்றமே ஆற்றந் உம் பகை"

குற்றம் புரிவது அழிவை உண்டாகத் தக்கது. கூடிய பகையாக மாறுவதால் குற்றம் புரியாமல் இருப்பது என்பதையே நோக்கமாக கொள்ள வேண்டும் என்ற வாக்கியர்க்கிணங்க நடந்து கொள்ள வேண்டும். அவ்வாறு தவறும் பட்சத்தில் தண்டிக்கப்படுவார்கள். ஒரு கண்ணிய மனிதராய் மனசாட்சிப் படி நியாயமாகவும் யாருக்காகவும் எதற்காகவும் பயப்படாமல் மக்கள் நலனை மட்டும் கருத்தில் கொண்டு பணியாற்றிக் கொண்டு வருபவர். கனிவான குணத்திற்கு சொந்தக்காரர். சட்டம் ஒழுங்கை பேணிக்காப்பதில் இவர் வல்லவர். பொது மக்களுக்கு நண்பனாகவும் பாதுகாவலனாகவும் சேவை மனப்பான்மையுடன் செயல்பட்டு வருகிறார் திண்டுக்கல் காவல்துறை துணைத் தலைவராகத் திகழும் டாக்டர் வி.சசிமோகன்.

காவல்துறையில் நேர்மை, வேகம், மக்கள் நலன் சார்ந்த அணுகுமுறை ஆகிய மூன்றையும் தனது பணியாகக் கொண்டு செயல்பட்டு வருபவர் திண்டுக்கல் சரக டிஐஜி டாக்டர் வி. சசிமோகன் ஐபிஎஸ். மருத்துவ கல்வியைப் பயின்று பின்னர் மக்கள் சேவைக்காக காவல் பணியைத் தேர்ந்தெடுத்த இவரது பயணமும் சாதனைகளும் இன்றைய இளைஞர்களுக்கு இவர் ஒரு சிறந்த வழிகாட்டியாக உள்ளார். மருத்துவ கல்வியில் இருந்து காவல் பணி வரை மருத்துவ படிப்பை எம்பிபிஎஸ்ஐ நிறைவு செய்து டாக்டர் பட்டம் பெற்ற இவர், சமுதாயத்திற்கு பரந்த அளவில் சேவை செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் இந்திய காவல் பணிக்கு ஐபிஎஸ் ஆயத்தமானார். தனது கடின உழைப்பால் ஐபிஎஸ் அதிகாரியாகத் தேர்வாகி தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் முக்கிய பொறுப்புகளை வகித்துள்ளார். பணியாற்றிய இடங்களும் முக்கிய சாதனைகளும் தடுப்பு நடவடிக்கைகளும் மிகச் சிறப்பாக இருந்தது. இவர் ஈரோடு, ராமநாதபுரம், சென்னை உள்ளிட்ட இடங்களில் எஸ்பியாகப் பணியாற்றினார்.பின்புஇவர் பணியாற்றியஇடங்களில் சட்டவிரோத கடத்தல்கள், போதைப்பொருள் பழக்கம் மற்றும் கூலிப்படைச் செயல்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டார். தொழில்நுட்ப பயன்பாடு, சைபர் குற்றங்களைக் கட்டுப்படுத்துவதிலும், நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி குற்றவாளிகளை விரைவாகக் கண்டுபிடிப்பதிலும் அதிக ஆர்வம் காட்டி செயல்படுகிறது செயல்படுத்தினார்.

காவல் நிலையங்களுக்கு வரும் பொது மக்களின் புகார்களுக்கு உடனடியாகத் தீர்வு காண்பது குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான குற்றங்களில் தயவு தாட்சனை இன்றி நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்தார்.

திண்டுக்கல் சரக டிஐஜியாகப் பொறுப்பேற்றது முதல் திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் சட்டம் ஒழுங்கை தீவிரமாக கண்காணித்து வருகிறார். கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்கள் விற்பனையில் வேரறுக்க தனிப்படைகள் அமைத்து தீவிர சோதனைகளை முடுக்கி விட்டுள்ளார். மேலும் காவலர்கள் நலன் மற்றும் பணிச் சூழலை



மேம்படுத்துவதிலும் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறார். இவர் ஈரோட்டில் சிறப்பு அதிரடிப் படை காவல் கண்காணிப்பாளராக இருந்தார். பின்பு பதவி உயர்வு பெற்று கோவை சரக டிஐஜி யாக நியமிக்கப்பட்டார். கோவை சரகத்தில் இவர் பொறுப்பு ஏற்ற பிறகு சட்டம் ஒழுங்கு, போக்குவரத்து, குற்றத் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொண்டார். பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பில் எந்த சமரசமும் கிடையாது. கோவை பொருட்கள் நடமாட்டத்தை குறைக்கவும் அதனை விற்பனை செய்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்தார்.

ஊருக்கு தான் உபதேசமா சட்டத்திற்கு புறம்பாக யார் நடந்தாலும் குற்றம் தானே. அதிலும் தான் உயிராக நேசிக்கும் காவல்துறையில் தவறுகள் யாராவது செய்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க தயங்குவது இல்லை. இவர் அமைதியான தோற்றம் கொண்டவர். எப்பொழுதும் சிரித்த முகத்துடன் இருப்பவர். ஆடம்பரம் இல்லாத எளிமையானவர். பதவி வரும்போது பணிவு வரவேண்டும் என்பதற்கு இவர் ஒரு சிறந்த உதாரணம். இவரின் சாதனைகளைப் பற்றி சொல்ல ஒரு தனி புத்தகமே போடலாம்.

பொது மக்களின் அமைதிக்கு பங்கம் யார் விளைவித்தாலும் கடுமையான நடவடிக்கை எடுப்பார். பிரச்சனை இதுதான் என்று பார்த்து குறைகளைத் தீர்க்காமல், யார் என்ன பிரச்சனைகளைக் கொண்டு வந்தாலும் அவர்களிடம் அன்பாக பேசி, அரவணைத்து அவர்கள் மனம் குளிரும் அளவிற்கு பேசி, அவர்கள் குறைகளைத் தீர்த்து, பொது மக்களின் அன்பினைப் பெற்று வருகிறார். சமூக விரோதிகளை ஓட ஓட விரட்டி உள்ளே தள்ளி பொதுமக்களை காப்பாற்றி வருகிறார். இவர் சமூக விரோதிகளுக்கு சிம்ம சொப்பனமாக விளங்குகிறார். தன்னம்பிக்கை கடின உழைப்பு சட்டப்படி நடவடிக்கை விடாமல் முயற்சி இவைகள் அனைத்தும் இவரின் வெற்றிக்கு காரணம். இவரின் நேர்மை மீது பணிகள் தொடர நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழ் / விஜிலென்ஸ் டிவி / விஜிலென்ஸ் மக்கள் இயக்கம் மற்றும் விஜிலென்ஸ் கல்வி அறக்கட்டளை சார்பில் மனதார பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம். இவரின் நேர்மைக்கு விஜிலென்ஸ் குடும்பத்தின் சார்பில் ராயல் சல்யூட்..

நமது விஜிலென்ஸ்

அரசியல் மற்றும் புலனாய்வு மாத இதழ்

RNI No. TNTAM / 2012 / 46424 அஞ்சுவது யாதொன்றும் இலேலை ஆண்டவனைத் தவிர

INDIA'S FIRST ISO 9001 : 2015 CERTIFIED MAGAZINE

INDIA'S TRADE MARK CERTIFIED MAGAZINE

நமது 15 | விஜிலென்ஸ் 02 | செப்டம்பர்-2026 | விலை:ரூ.20/-

Namathu : 15|Vijilence:02 | September:2026 | Price:20/-

நிறுவனர்/வெளியீட்டாளர்/ஆசிரியர்

திரு.HE.AMB. சேவா ரத்னா விஜிலென்ஸ். DR.D. ஆனந்தன் துரைராஜ்
M.A.,M.A.,Ph.D.,Dip.Agri.,HDSE.,HCC.,

இணை ஆசிரியர்கள்

திருமதி.HE.AMB. சேவா ரத்னா விஜிலென்ஸ். DR.பா.தமிழ் பாரதி ஆனந்தன்
B.SC.,M.A.,M.Phil.,DTP.,PGDCA.,

விஜிலென்ஸ் DR.A. கிருஷ்ணன்

நிர்வாக ஆசிரியர் :

திருமதி.E. தமிழ் சுமதி இளங்கோவன்., சென்னை

செய்தி ஆசிரியர் : M.செளந்தர பாண்டியன்.,

உதவி ஆசிரியர்கள் :

M.சண்முக பாண்டியன், Dr.M.G. ஜானகிராமன், பாண்டிச்சேரி அக்பர் அலி, வடிவேல், ராஜாசிங், கராத்தே கார்த்தி

சிறப்பு ஆசிரியர்கள் :

E.திருவிக்ரம், நசீர், பெரியசாமி சிவக்குமார், சாகுல் குமார், ஊட்டி சிவகிருஷ்ணா, பிர்லா போஸ், எஸ் என் ஆர், செந்தில்குமார், நரேஷ் ஈஸ்வர், மகேந்திரன், அரவிந்த் மோதிலால் காதரே, பிரகாஷ் ராஜன்

கௌரவ ஆசிரியர்கள் :

கல்வித் தந்தை DR.S.ராமமூர்த்தி, D.தனபால் (Ex. உள்துறை அரசு துணைச் செயலாளர், தலைமைச் செயலகம்,) வேலன் (கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஓய்வு.) சேலம் R.R. பிரியாணி தமிழ்ச்செல்வன்

தலைமை நிருபர்கள் :

பூமாரி, அழகேசன், காமராஜ், Karnataka KGF Anbarasan, Manikandan, Kamala Kannan, கேரளா சசிகுமார், புதுதில்லி விவேகானந்தா, அடால்ஃப் எட்வின்,

நிருபர்கள் :

செளந்தர், வினோத், வெங்கடேசன், ரகு, தினேஷ்குமார், சிவக்குமார், பாலமுருகன், ராஜா, சவுதி அரேபியா Paul Asriprince Philemon, பாஸ்கர், வசந்தகுமார், வெங்கடகிருஷ்ணன், வினோத் குமார், முருகேசன், செல்வம், பழனிச்சாமி, முஜிபூர் ரஹமான், தமிழரசன், பரந்தாமன், அல்போன்ஸ் ஜான் கென்னத்

ஒளிப்பட நிருபர் : சண்முக பாண்டியன், பாபு.

சட்ட ஆலோசகர்கள் :

திருச்சி M.சிவக்குமார்.,M.A.,B.L.,DCA.,DLL&AL., மதுரை கிளை உயர்நீதிமன்றம்
நாமக்கல் S.அன்பரசன்.,B.A.,B.L., சென்னை உயர்நீதிமன்றம்
G.ராதாகிருஷ்ணன்.,M.B.A.,B.L., மதுரை கிளை உயர் நீதிமன்றம்
DR.A.செல்வகுமார்.,MCA.,M.Sc.,(IT)B.L.,சென்னை உயர்நீதிமன்றம்
T.பிரபு அரசு.,B.Tech.,L.L.B.,சென்னை உயர்நீதிமன்றம்
K.அரவிந்தன்.,B.A.,B.L.,சென்னை உயர்நீதிமன்றம்

ஆசிரியரின் முகவரி : 78/25, பருசல் துறை ரோடு, முசிறி 621 211, திருச்சி மாவட்டம்.

நிர்வாக அலுவலகம் : 3/34A, சாரதி நகர் முதல் தெரு, பூவிருந்தவல்லி, சென்னை 600 056

கிளை அலுவலகங்கள் :

புதுதில்லி, பாண்டிச்சேரி, கர்நாடகா, கேரளா

Cell : 89734 15000

Email : namathuvijilence@gmail.com

Website : vijilencenetwork.com

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நமது விஜிலென்ஸ் நிர்வாகம் பொறுப்பல்ல. இதழில் வெளியாகும் செய்திகளின் உண்மைத் தன்மைக்கு அந்தந்த செய்தியாளர்களே பொறுப்பு.



ஆசிரியர்

ஜென்சி கிட்ஸ் பெண்களிடம் பரவும் போதை கலாச்சாரம்..

தமிழகம் தற்போது போதைக்கு அடிமையாகி இருக்கிறது என்றால் அது மிகை அல்ல. போதை ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் போதை உண்டு. ஆண்களுக்கு நிகரானவர்கள் பெண்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் பெண்களும் போதை கலாச்சாரத்தில் மூழ்கி இருக்கிறார்கள் என்ற செய்தி தான் வேதனை அளிக்கிறது.

ஜென்சி தலைமுறையில் அதிலும் குறிப்பாக இளம் பெண்களின் எதிர்காலம் பற்றிய கனவுகளைப் பார்க்கும் போது என்னவாகுமோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு 18 வயது கூட ஆகாத இரண்டு இளம் பெண்கள் போதையில் புழல் நெடுஞ்சாலையில் வாகனங்களை மறித்து போட்ட ஆட்டம் பார்த்தவர்களை முகம் சுளிக்க வைத்தது. அதே பாணியில் மேலும் ஒரு இளம் பெண் திருவல்லிக்கேணியிலும் நடுரோட்டில் ரகளை ஈடுபட்டதும் சாந்தப்படுத்த முயன்ற காவல் துறையினரை கூட மோசமான வார்த்தைகளால் அர்ச்சனை செய்ததும் மிகப்பெரிய அதிர்ச்சி அதிர்வுகளை ஏற்படுத்தியது.

நகரில் வாழும் இளம் பெண்களும் ஆண்களைப் போலவே போதை தலைக்கேறி ரோட்டில் ஆட்டம் போடுவதும், ஆங்காங்கே விழுந்து கிடப்பதையும் பார்க்கும்போது நெஞ்சம் பொறுக்கவில்லை. பெண்களா இவர்கள் என்று அவர்களைப் பார்த்து வசைபாட மனம் வரவில்லை. ஐயோ பாவம் இப்படி சீரழிகிறதே என்று பரிதாபப்பட வைக்கிறது. எதிர்காலத்தை விழுங்கும் இந்த ஆபத்தான பழக்கம் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரிடம் மட்டுமே முன்பு காணப்பட்டது. ஆனால் இன்று அந்த நிலை மாறிவிட்டது. வயது, பால், பொருளாதார அந்தஸ்து என்ற எந்த வேறுபாடும் இல்லாமல் போதைப்பழக்கம் அதிகரித்து வருகிறது. குறிப்பாக இளம் பெண்களிடையே போதை பழக்கம் அதிகரித்து வருவது குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் மிகப்பெரிய எச்சரிக்கை மணியாக ஒலிக்கத் தொடங்கியுள்ளது. இந்தப் பழக்கம் ஒரே நாளில் உருவாகி விடுவதில்லை. நண்பர்களின் வற்புறுத்துதல், ஆசை, மன அழுத்தம், தனிமை, காதல் தோல்வி, ஜாதிக்காக, குடும்ப பிரச்சினைகள் போன்ற பல்வேறு காரணங்களால் ஒருமுறை குடித்துதான் பார்ப்போம் என்று தொடங்கும் பழக்கம் தான் இப்படி வீதி வரை கொண்டு வந்து நிறுத்தி விடுகிறது.

சமூக ஊடகங்களில் போதை பொருள் பயன்படுத்துவதை ஒரு நவீன வாழ்க்கை முறையாக சித்தரிப்பதும், பாலின வேறுபாடு இன்றி இளம் தலைமுறை தவறான பாதைக்கு வழி நடத்திச் செல்கிறது. போதை எந்த பிரச்சினையையும் தீர்ப்பதில்லை. மாறாக புதிய பிரச்சினையை தான் உருவாக்கும் என்பதை அவர்கள் உணர்வதில்லை. இன்றைய தலைமுறையினரை சமூக ஊடகங்கள் நிழலாகத் தொடர்கிறது. அதில் காணப்படும் சில உள்ளடக்கங்கள் கூல் அல்லது ஸ்டைலான விஷயமாக காட்டுகிறது. ஒரு பெண் போதை பழக்கத்துக்கு ஆளானது தெரிய வந்ததும் குடும்பத்தினர் அதிர்ச்சி அடைவது இயல்புதான். ஆனால் அவர் மீது கோபம் அவமானப்படுத்துதல் வெறுத்து ஒதுக்குதல் போன்ற அணுகுமுறைகள் பிரச்சனையை மேலும் மோசமாக்கும் என்கிறார்கள் உளவியல் நிபுணர்கள்.

சமீபத்தில் பள்ளி ஒன்றில் மாணவர்கள் மது அருந்தும் வீடியோ தமிழகத்தையே அதிர்ச்சி அடைய செய்தது. பெண் குழந்தைகள் விஷயத்தில் பெற்றோர்கள் கண்காணிப்பு முக்கியம். இளம் பெண்ணின் நடத்தையில் திடீர் மாற்றம் தெரிந்தால் அலட்சியமாக இருக்கக் கூடாது. குடும்பத்தினரிடம்

இருந்து விலகி இருப்பது, படிப்பு அல்லது வேலையில் முழு ஈடுபாட்டோடு இல்லாமல் இருப்பது, அடிக்கடி பொய் பேசுதல், அதிகமாகச் செலவழிப்பது போன்ற மாற்றங்கள் தெரிந்தால் அதன் பின்னணியில் ஏதோ நிகழ்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு பெண்ணின் கனவு என்பது ஒரு குடும்பத்தின் நம்பிக்கை. அந்தக் கனவுகளுக்கு இடையே போதை பழக்கம் நுழைந்து விட்டால் வாழ்க்கையின் பாதையே மாறிவிடும். வீட்டில் பூச்சிகளைப் போல் போதைப் பழக்கத்தில் விடும் பெண்களை மீட்பதும் போதை பொருளுக்கு எதிரான போராட்டமும் காவல்துறையின் பொறுப்பு மட்டுமல்ல பெற்றோர்கள் கவனிக்க வேண்டும். ஆசிரியர்கள் வழிகாட்ட வேண்டும். நண்பர்கள் துணை நிற்க வேண்டும். சமூகம் அரவணைக்க வேண்டும். அரசும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். பாவம் போதை பெண்களை போதையின் பாதையில் இருந்து மீட்போம். யாரும் அந்தப் பாதையில் திரும்பாமல் இருக்க உறுதியுடன் செயல்படுவோம்.



சேலம் செந்தில் குமார்

தொடர் கஞ்சா வழக்குகளில் தொடர்புடைய பெண் மீது தடுப்புக் காவல் நடவடிக்கை மாவட்ட ஆட்சியர் உத்தரவு..

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடர் கஞ்சா வழக்குகளில் தொடர்புடைய கவிதா @ பானுமதி (33) என்ற பெண் மீது "Drug Offender" பிரிவின் கீழ் தடுப்புக் காவல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, வேலூர் சிறப்பு பெண்கள் சிறையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

கடந்த 01.08.2026 அன்று கிருஷ்ணகிரி தாலுக்கா காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பாஞ்சாலியூர் பகுதியில் காரில் கஞ்சா கடத்தப்படுவதாக காவல்துறையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், கிருஷ்ணகிரி தாலுக்கா காவல் ஆய்வாளர் மணிமாறன் தலைமையில், காவல் உதவி ஆய்வாளர் அன்பழகன், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி, தலைமை காவலர் 973 பூங்காவனம் மற்றும் பெண் தலைமை காவலர் 1956 பூவிழி ஆகியோர் அடங்கிய காவல் குழுவினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

அப்போது அங்கு வந்த பதிவு எண் இல்லாத டாடா இன்டிகா காரில் இருந்து ஆண் நபர் ஒருவர் தப்பியோடிய நிலையில், காரில் இருந்த கவிதா @ பானுமதி (33) என்பவரை காவல் குழுவினர் பிடித்தனர். காரைச் சோதனைச் செய்ததில் 1.250 கிலோ கஞ்சா, கஞ்சா கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் கார் மற்றும் ரூ.70,650/ ரொக்கப் பணம் ஆகியவை கைப்பற்றப்பட்டன. இதையடுத்து கவிதா கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டார்.மேலும், காவல்துறையினரின் விசாரணையில் கவிதா மீது 2021 முதல் 2026 வரையிலான காலகட்டத்தில் SIPCOT, ஓசூர் டவுன், குனியமுத்தூர் (கோயம்புத்தூர்) மற்றும் கந்திகுப்பம் காவல் நிலையங்களில் 4 கஞ்சா தொடர்பான வழக்குகள் இருப்பது தெரியவந்தது. இதில், கந்திகுப்பம் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கில் சுமார் 200 கிலோ கஞ்சா தொடர்பான குற்றச்சம்பவத்தில் அவருக்கு தொடர்பு இருப்பதாக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து போதைப்பொருள் தொடர்பான குற்ற வழக்குகளில் தொடர்புடையவராக இருந்ததைக் கருத்தில் கொண்டு, கவிதா மீது தடுப்புக் காவல் நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அனிதா மற்றும் கிருஷ்ணகிரி உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் ராமச்சந்திரன் ஆகியோர் பரிந்துரை செய்தனர்.

அதனடிப்படையில், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரும், மாவட்ட குற்றத் தடுப்பு நடுவருமான சி. தினேஷ் குமார், இ.ஆ.ப., தடுப்புக் காவல் உத்தரவு பிறப்பித்தார். அவ்வுத்தரவின்படி, கவிதா வேலூர் சிறப்பு பெண்கள் சிறையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். மேலும், தடுப்புக் காவல் உத்தரவின் நகலை கிருஷ்ணகிரி தாலுக்கா காவல் ஆய்வாளர் மணிமாறன் நேரில் சென்று சிறையில் உள்ள கவிதாவிடம் வழங்கினார்.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபடுவோர் மீது சட்டப்படியான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என கிருஷ்ணகிரி மாவட்ட காவல்துறை தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.





ஆசிரியர்

பாகிஸ்தான் சிறையில் இம்ரான்கானை சந்தித்தாரா முதல்வர் விஜய்?..

சமூக வலைதளங்களில் பரவி வரும் வீடியோ..

வடமாநிலத்தில் காலை எழுந்தவுடன் பல் துலக்குகிறார்களோ இல்லையோ வட மாநில இன்ஸ்டால் இன்புளுன்ஸர்கள் தமிழ்நாட்டைப் பற்றி ஒரு ரிலீஸ் போட்டு விட்டு தான் தங்கள் அன்றாடப் பிழைப்பையேத் தொடங்குவார்கள் போல?. தமிழ்நாட்டில் என்னதான் நடக்கிறது என்று இங்குள்ள மக்களுக்கு தினமும் குழப்பம் வரும் நிலையில் வட மாநிலங்களில் கேமரா முன் பேசும் இன்ஸ்டாகிராம் பிரபலங்களுக்கு மட்டும் நம் ஊர் நிலவரம் அவ்வளவு அத்துபடியாக இருக்கிறது. தமிழ்நாடு முதல்வர் மிகப்பெரிய புரட்சிகளை எல்லாம் செய்து முடித்து விட்டதாக அங்கே தினமும் ஒரு பகிர் செய்தி கிளப்புகிறார்கள். ஹிந்தி இன்புளுன்ஸர்கள் அடித்து விடும் பச்சை பொய்களைப் பார்த்து அடடே நம்ம ஊர்ல இதெல்லாம் நடந்திருக்கா நமக்கு தான் நியூஸ் தெரியலையோ என நம்மையே ஒரு நிமிடம் ஸ்தம்பிக்க வைக்கும் அளவுக்கு அவர்களின் நடிப்பு உள்ளது.

Instagram லயே காலை முதல் இரவு வரை பொழப்பை கழிப்பவர்களைக் கேட்டால் தமிழ்நாடு, அமெரிக்கா மற்றும் சுவிட்சர்லாந்தை விட மிகச் சிறப்பாகச் செயல்படுவதாகக் கூறுவார்கள். நம்ம ஊரு இன்சுலின்சர்களின் ரீல்ஸ்கள் எல்லாம் சாதா ரகம். வடக்கன்ஸ் போடும் ரீல்ஸ் எல்லாமே ஸ்பெஷல் ரகம் தான். அவற்றில் சிலவற்றை இங்கே நமது விஜிலென்ஸ் வாசகர்கள் மற்றும் தமிழக மக்களின் பார்வைக்காக..

தமிழ்நாட்டில் எந்த ஒரு பெண்ணுக்கும் பாலியல் வன்கொடுமை நடந்தாலும் அடுத்த 24 மணி நேரத்துக்குள் குற்றவாளிக்கு தூக்கு தண்டனை அல்லது என்கவுண்டர் என முதல்வர் விஜய் உத்தரவிட்டு உள்ளதாக தகவல் பரப்பப்பட்டு வருகிறது.

பெட்ரோல் டீசல் விலையைக் குறைக்காவிட்டால் தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசுக்கு வரி செலுத்தாது என்றும் பிரதமர் மோடி உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு நேரடி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் சில ரீல்ஸ்களில் கூறப்படுகிறது.

மசூதிகள் மற்றும் மதராசாக்களின் மின்சார கட்டணத்தைத் தமிழக அரசே செலுத்துவதாகவும் இதற்காக தனியார் நிறுவனங்களும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் சில ரீல்ஸ்கள்..

கோயில் உண்டியல்களில் கிடைக்கும் காணிக்கை பணம் அப்படியே அரசு பள்ளிகளுக்கும் மருத்துவமனைகளுக்கும் அனுப்பப்படுவதாகவும் சில ரீல்ஸ்கள்..

தமிழ்நாட்டில் இனி மாடுகளை வெட்டக்கூடாது என்றும், பசு இறைச்சிக்கு தடை விதிக்கப்பட்டு விட்டதாகவும் ரீல்ஸ்கள் இப்படி பல தவறான தப்பான தகவல்களை ரீள்ஸ்கள் என்ற பெயரில் வடக்கன்கள் பரப்பி வருகின்றனர்.

முதல்வர் விஜய் பாகிஸ்தான் சென்றுள்ளதாகவும், பாகிஸ்தானைச் சேர்ந்த அரசியல் கட்சி தலைவர்கள், அவருக்கு பிரம்மாண்ட வரவேற்பு அளித்ததாகவும், சமூக வலைத்தளங்களில் பல ரீல்ஸ்கள் பரவி வருகின்றன. பாகிஸ்தான் சிறையில் உள்ள பாகிஸ்தான் முள்ளான் பிரதமர் இம்ரான் கானுக்கு விஜய் ஆதரவு அளிப்பது போன்றும், அவரது சகோதரி அலிமாகானைச் சந்தித்ததாகவும் வீடியோக்கள் பரப்பப்பட்டு வருகின்றன. பாகிஸ்தான் மக்களுக்கு விஜய் பத்தாயிரம் பணம் வழங்கி உதவி செய்வதாகவும் ஒரு வீடியோவில் இருக்கிறது.

தமிழ்நாட்டில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட

காட்சிகளையும், செயற்கை நுண்ணறிவு ஏஐ மூலம் உருவாக்கப்பட்ட காட்சிகளையும் இணைத்து போலியான தகவல்களுடன் இந்த வீடியோக்கள் உருவாக்கப்பட்டுள்ளது என ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்தியாவின் எந்த மாநில முதல்வரும் ஒன்றிய அரசின் அனுமதியை பெறாமல் வெளிநாடுகளுக்கு போகவே முடியாது என்பது நம்ம எல்லோருக்கும் தெரியும். ஒன்றிய அரசு ஒரு மாநில முதல்வர் வெளிநாடு செல்வதற்கு பல்வேறு கட்டுப்பாடுகளை விதிக்கும். எளிதில் அனுமதியும் கிடைக்காது. அதுவும் எதிரி நாடான பாகிஸ்தான் போக வேண்டும் என்றால் கேட்கவே வேண்டாம் கண்டிப்பாக எந்த மாநில முதல்வருக்கும் அனுமதி தரப்படாது. முதல்வர் விஜய் பாகிஸ்தான் சென்று அங்கு அரசியல் தலைவன் சிறையிலுள்ள முன்னாள் பிரதமர் இம்ரான் கான் உள்ளிட்டோரைப் பார்த்து ஆதரவு தந்ததாக வெளியிட்டால் ஒன்றிய அரசு பார்த்துக் கொண்டு சும்மா இருக்குமா?.. விஜய் புகழ் வெளிநாடுகளிலும் பரவி இருக்கிறது என்று கெத்து காட்டுவதற்காக இப்படி ஒரு வீடியோவை ஒரு குரூப் திட்டமிட்டு உருவாக்கி பரப்பி வருவதாகத் தெரிகிறது.

விஜய் பிரதமர் ஆகிறார் என்ற ரீல்ஸ்களைப் பார்த்து ஏற்கனவே ஒன்றிய பாஜக அரசு கடுப்பில் இருப்பதாகக் கூறப்படும் நிலையில், எதிரி நாட்டுக்குச் சென்றார். தலைவர்களைப் பார்த்தார். மக்களுக்கு பத்தாயிரம் நலத்திட்ட உதவிகளை வழங்கினார் என்றால் பொதுவி அரசு பார்த்துக் கொண்டு சும்மா இருக்குமா என்று வெளியுறவு தொடர்பான நிபுணர்கள் கருத்து கூறியுள்ளனர். ஏதோ விஜய்க்கு பில்டப் கொடுப்பதாக நினைத்து கொண்டு நாட்டுக்கே எதிரியான வீடியோக்களை ஒரு கும்பல் உருவாக்கி பரப்பி வருகிறது. இது விஜயை மிகப்பெரிய சிக்கலில் கொண்டு போய் நிறுத்தி விடும் என்று எச்சரிக்கை விடுக்கின்றனர்.

விஜய் பற்றிய ஒரு பெண் ரீல்ஸ் வெளியிட்டு இருந்தார். அவர் ரீல்ஸ் வெளியிட 60,000 கேட்டதாக தகவல். இப்படித்தான் இருக்கிறது. இவர் இதுவரை 10 வீடியோக்கள் வெளியிட்டு உள்ளார். அப்போ 6 லட்சம் வரை சம்பாதித்து உள்ளார். பணம் பாதாளம் வரைக்கும் பாயும் என்பதற்கு இதுவே நல்ல உதாரணம்.


சமூக வலைத்தளங்களில் பரவும் ஒவ்வொரு தகவலையும் மக்கள் உண்மை என நம்பி விடக்கூடாது. குறிப்பாக ஒரு மாநில அரசின் கொள்கைகள் குறித்து தவறான தகவல்கள் திட்டமிட்டு பரப்பினால் அது அந்த மாநிலத்தைப் பற்றிய பொதுப்பார்வையை மாற்றக்கூடும். எனவே தமிழக அரசின் தகவல் மற்றும் உண்மை சரிபார்ப்பு அமைப்பும், காவல்துறையின் சைபர் கிரைம் பிரிவும் இத்தகைய தகவல்களை தொடர்ந்து கண்காணித்து உண்மை மற்றும் பொய்யைத் தெளிவுபடுத்த வேண்டும். அதே நேரத்தில் இந்த பிரச்சாரங்களுக்கும், தங்களுக்கும் தொடர்பு இல்லை என்றால் அதைத் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு விஜய்க்கும் தமிழக வெற்றி கழக தரப்பினருக்கும் உள்ளது

சமூக வலைத்தளங்களில் தவறான தகவல்களைப் பரப்புவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க சட்டம் இயற்ற வேண்டும் என்பதே நம் அனைவரின் கோரிக்கையாகும்.



கள்ளக்குறிச்சி வெங்கடேசன்

திருக்கோவிலூரில் ரூ.54 கோடியில் கட்டப்பட்ட 6 தளங்களுடன் கூடிய அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருமா?.. 3 மாவட்ட எல்லை கிராம மக்கள் எதிர்பார்ப்பு..!!



கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூரில் ரூ.54 கோடி நிதி ஒதுக்கீட்டில் 6 தளங்களுடன் பிரம்மாண்டமாகக் கட்டப்பட்டுள்ள அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, கட்டுமானப் பணிகள் முடிந்தும் திறக்கப்படாமல் தாமதமாகி வருவதால் ஏழை, எளிய நோயாளிகள் கடும் அவதிப்பட்டு வருகின்றனர். இந்த மருத்துவமனையை உடனடியாக மக்கள் பயன்பாட்டிற்கு அரசு கொண்டு வர வேண்டும் என பொது மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கள்ளக்குறிச்சி, விழுப்புரம், திருவண்ணாமலை ஆகிய 3 மாவட்டங்களின் எல்லைப் பகுதியில் திருக்கோவிலூர் அமைந்துள்ளது. திருக்கோவிலூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள், விவசாயத் தொழிலாளர்கள், ஏழை எளிய மக்கள் அனைவரும் மருத்துவ சிகிச்சைக்காக இந்த அரசு மருத்துவ மனையையே முழுமையாக நம்பியுள்ளனர். அவசர சிகிச்சை மற்றும் விபத்து காலங்களில் உயிர்காக்கும் மையமாக இப்பகுதி மக்களுக்கு திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையே

திகழ்கிறது. தற்போது செயல்பட்டு வரும் பழமையான கட்டிடத்தில் போதிய இடவசதியும், நவீன சிகிச்சை உபகரணங்களும் இல்லாததால், அவசரப் பிரிவுக்கு வரும்

நோயாளிகள் மேல் சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கோ அல்லது புதுச்சேரி ஜிப்மர் மருத்துவ மனைக்கோ பரிந்துரைக்கப்படுகின்றனர்.

இதனால், அவசர காலத்தில் நோயாளிகளின் உயிரைக் காப்பாற்ற வேறு வழியின்றி, ஏழை மற்றும் நடுத்தர

குடும்பத்தினர் பெரும் தொகையைக் கடனாகப் பெற்று தனியார் மருத்துவ மனைகளைத் தேடிச் செல்லும் அவல நிலை நீடித்து வருகிறது.

இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, திமுக அரசின் முதல் பட்ஜெட் கூட்டத்தொடரில் திருக்கோவிலூர் அரசு மருத்துவ மனையை மாவட்ட தலைமை மருத்துவ மனையாக தரம் உயர்த்த அறிவிப்பு வெளியானது.

அதனைத் தொடர்ந்து ரூ.54 கோடி நிதி ஒதுக்கீட்டில் பணிகள் தொடங்கப்பட்டன. 6 தளங்களுடன் இரண்டு தனி தனி பிளாக்குகளாக நவீன வசதிகளுடன் கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 6 தளங்களைக் கொண்ட புதிய பிரம்மாண்ட கட்டிடம் கம்பீரமான முகப்பு வளைவு என அனைத்து கட்டுமான பணிகளும் நிறைவடையும் தருவாயில் உள்ளன. 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இதற்கான டெண்டர் விடப்பட்டு 18, மாதங்களுக்குள் பணிகளை முடிக்க வேண்டும் என ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதன்படி 2024 ஆம் ஆண்டு பணிகள் அனைத்தும் நிறைவடைந்து திறக்கப் பட்டிருக்க வேண்டும். ஆனால், கட்டுமானப் பணிகள் முடிவடையும் நிலையில் இருந்தும், அதிகாரப் பூர்வமாகத் திறந்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதில் தொடர்ந்து தாமதம் ஏற்பட்டு வருகிறது. ரூ.54 கோடி மக்கள் பணத்தில் பிரம்மாண்ட கட்டிடம் கட்டப்பட்டும், இன்னும் திறக்கப்படாமல் பூட்டியே இருப்பது இப்பகுதி மக்க ளிடையே பெரும் வேதனையையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

ஏழை நோயாளிகள் தனியார் மருத்துவ மனைகளுக்குச் சென்று பணவிரயம் செய்வதையும், மேல் சிகிச்சைக்காக தொலைதூரம் அலைவதையும் தவிர்க்க அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையைத் திறக்க உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிறப்பு மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள், அதி நவீன மருத்துவப் பரிசோதனை கருவிகள், அவசர சிகிச்சைப் பிரிவு உள்கட்டமைப்புகள் ஆகியவற்றை உடனடியாக நியமித்து. பூட்டிக்கிடக்கும் இந்தப் புதிய மாவட்ட தலைமை மருத்துவமனையை முதலமைச்சர் விரைந்து திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும் என்பதே 3 மாவட்ட எல்லை கிராம மக்களின் ஏகோபித்த கோரிக்கையாகும்.



வெள்ளி மண் திருடிய வழக்கில் த.வெ.க. முன்னாள் நிர்வாகி உட்பட ஐந்து பேர் கைது..

ஊட்டியில் மூடப்பட்ட எச்.பி.எப்., தொழிற்சாலையில் வெள்ளி மண் திருடிய வழக்கில் த.வெ.க முன்னாள் நிர்வாகி உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர்.

ஊட்டி எச்.பி.எப்., பகுதியில் செயல்பட்டு வந்த, மத்திய அரசின் இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் தொழிற்சாலை, நிதி நெருக்கடி மற்றும் உற்பத்தி பாதிப்புகளால் பல ஆண்டுகளுக்கு முன்பு மூடப்பட்டது. இதையடுத்து, தொழிற்சாலை வளாகத்தில் சிலர் அத்துமீறி நுழைந்து மண் மற்றும் கற்களை அகற்றி விற்பனைச் செய்து வருவதாக புகார்கள் எழுந்து வந்தன.

குறிப்பாக, தொழிற்சாலை வளாகத்தில் உள்ள மண்ணில் தங்கம் மற்றும் சில்வர் நைட்ரேட் கலந்த வெள்ளி துகள்கள் கலந்திருப்பதாக நம்பப்பட்டதால், சிலர் அந்த மண்ணை சட்டவிரோதமாக அள்ளிச் சென்று விற்பனைச் செய்து வருவதாகக் கூறப்படுகிறது.

ஊட்டியில் இருந்து கடத்தப்படும் மண் மேட்டுப்பாளையம் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து வெள்ளி பிரித்தெடுக்கப்பட்டு இலங்கைக்கு கொண்டுச் செல்வதாகக் கூறப்படுகிறது. புலி உள்ளிட்ட ஆபத்தான மிருகங்கள் இருக்கும் இடங்களில் இரவு நேரங்களில் உயிரைப் பணயம் வைத்து இந்த கொள்ளைச் சம்பவம் நடைபெற்று வருகிறது.

இதுவரை இந்தச் சம்பவங்களில் ஈடுபட்டதாக, 40க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு உள்ளனர். எனினும், கடத்தல் சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

தற்போது, மீண்டும் ஒரு கும்பல், ஊட்டி எச்.பி.எப்., தொழிற்சாலையில், வெள்ளி கலந்த, 7 மூட்டை மணலைத் திருடி வனப்பகுதியில் மறைத்து வைத்திருந்தது. வனப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மணல் மூட்டைகளை மீண்டும் எடுத்து, கோவைக்கு விற்பனைக்கு கொண்டு செல்ல முயன்றபோது போலீசார் இந்த கும்பலைச் சேர்ந்த சுரேஷ் 46, மணிவண்ணன் 34, சதீஷ் 32, வினோத்குமார், 22, மற்றொரு சதீஷ் 36 ஆகிய, 5 பேரை போலீசார் கைது செய்தனர்.

இதற்கிடையே வெள்ளி மண்ணை வாங்கிய முக்கிய அரசியல் கட்சியைச் சேர்ந்த பிரமுகர்கள் உட்பட பலரை பிடிக்க போலீசார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது



கன்னியாகுமரி கலெக்டர் நேர்மையின் உச்சம்

மு.பிரதாப் IAS., அதிரடி ..

அரசு அலுவலகங்களில் பணம் கொண்டு வரும் ஊழியர்கள் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும் தமிழ்நாட்டிற்கே முன்னுதாரணமாக சுற்றறிக்கை!

"பணத்தைப் பதிவு செய்யத் தவறினால் ஊழல் குற்றச்சாட்டு" உயர் நீதிமன்ற கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் கன்னியாகுமரி கலெக்டர் அதிரடி. 38 அலுவலகங்களில் ரூ.1.18 கோடி பறிமுதல். ஜூலை மாதம் மட்டும் 24 பேர் கைது பின்னணியில் வெளியான சுற்றறிக்கை.

கன்னியாகுமரி, ஆகஸ்ட் 30 – தமிழ்நாட்டிற்கே முன்னுதாரணமாக அமையும் வகையில், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் மு. பிரதாப், ஐ.ஏ.எஸ்., அதிரடியான சுற்றறிக்கை ஒன்றை பிறப்பித்துள்ளார். அரசு அலுவலகங்களுக்கு வரும் ஊழியர்கள் தாங்கள் கொண்டு வரும் பணத்தின் மூலத்தையும் தொகையையும் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும் என்பதே இந்த சுற்றறிக்கையின் முக்கிய அம்சமாகும். சமீபகாலமாக லஞ்ச ஒழிப்புத்துறை (DVAC) நடத்திய சோதனைகளில் கண்டறியப்பட்ட கோடிக்கணக்கான பண முறைகேடுகளின் பின்னணியில், மேலும் உயர் நீதிமன்றம் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

1. புதிய சுற்றறிக்கையின் முக்கிய அம்சங்கள் என்ன கட்டாயம்? இந்த சுற்றறிக்கை, அரசு ஊழியர்கள் கையில் கொண்டு வரும் பணம் குறித்து தெளிவான பதிவேடு வைக்க வேண்டும் என்பதைக் கட்டாயமாக்குகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் இந்த சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

சுற்றறிக்கையின் நான்கு முக்கிய நோக்கங்கள் :

தனிப்பட்ட பண பதிவேடு (Personal Cash Register) : ஒவ்வொரு அதிகாரியும் தாங்கள் அலுவலகத்திற்கு கொண்டு வரும் பணத்தின் மூலத்தையும் தொகையையும் பதிவு செய்ய ஒரு தனிப்பட்ட பண பதிவேட்டை பராமரிக்க வேண்டும்.

தினசரி மேற்பார்வை : இந்தப் பதிவேடு ஒவ்வொரு நாளும் மேற்பார்வை அதிகாரியால் பரிசீலிக்கப்பட்டு கையொப்பமிடப்பட வேண்டும். இதன் மூலம் பதிவு செய்யப்பட்ட பணம் உடனடியாகச் சரிபார்க்கப்படுகிறது.

தேவையற்ற பணப் பயன்பாடு தவிர்ப்பு : அலுவலக பணிகளுக்கு மிகவும் அவசியமான சந்தர்ப்பங்களில் மட்டுமே அதிக அளவு பணத்தை எடுத்துச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஊழல் எதிர்ப்பு எச்சரிக்கை : பணத்தைப் பதிவு செய்யத் தவறினால், அது கணக்கில் வராத பணமாக (unaccounted money) கருதப்பட்டு, ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஊழியர்கள் பொறுப்பாவார்கள் என்று தெளிவாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

2. ஏன் இந்த சுற்றறிக்கை? சமீபத்திய சோதனைகளின் பின்னணி!

இந்த சுற்றறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னதாக, தமிழகம் முழுவதும் லஞ்ச ஒழிப்புத்துறை (DVAC) நடத்திய அதிரடி சோதனைகளில் பெரும் பண முறைகேடுகள் கண்டறியப்பட்டன.

38 அலுவலகங்களில் சோதனை : சமீபத்திய மாநிலம் தழுவிய சோதனையில், 38 அரசு அலுவலகங்களில் நடத்தப்பட்ட ஆய்வில் ரூ.1.18 கோடி கணக்கில் வராத பணம் மற்றும் சந்தேகத்திற்கிடமான டிஜிட்டல் பரிவர்த்தனைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

ஜூலை மாதம் 24 பேர் கைது : கடந்த ஜூலை 1 முதல் 31 வரையிலான காலகட்டத்தில், லஞ்ச ஒழிப்புத்துறை 24 அரசு ஊழியர்களைக் கைது

செய்து, ரூ.1.3 கோடிக்கும் மேற்பட்ட கணக்கில் வராத பணத்தை பறிமுதல் செய்துள்ளது.

எல்லைச் சோதனைச் சாவடிகளில் பறிமுதல் : நடத்தப்பட்ட சிறப்பு நடவடிக்கையில், எல்லைச் சோதனைச் சாவடிகளில் ரூ.9.87 லட்சம் கணக்கில் வராத பணம் பறிமுதல் செய்யப்பட்டது.

3. உயர் நீதிமன்றத்தின் கேள்வி இந்த சுற்றறிக்கை அதற்கான பதிலா?

அரசு ஊழியர்கள் பணியின் போது கையில் எவ்வளவு பணம் வைத்திருக்கலாம் என்பதற்கான ஒருங்கிணைந்த வழிகாட்டுதல் இல்லாத நிலையில், மதுரை கிளை உயர் நீதிமன்ற நீதிபதி பி. புகழேந்தி தமிழக அரசிடம் கேள்வி எழுப்பியிருந்தார். அதிக அளவு பணத்தை அலுவலகத்திற்கு கொண்டு வருவதன் அவசியத்தை அரசு நிர்ணயிக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டிருந்தார். தற்போது கன்னியாகுமரி கலெக்டர் வெளியிட்டுள்ள இந்த சுற்றறிக்கை, அந்த கேள்விக்கான பதிலாகவும், ஊழலைத் தடுக்கும் ஒரு முக்கிய நடவடிக்கையாகவும் அமைந்துள்ளது. மேலும், இது மற்ற மாவட்ட நிர்வாகங்களுக்கும் ஒரு முன்னுதாரணமாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கருப்பு எழுத்துக் கழக பகுப்பாய்வு :

அரசு அலுவலகங்களில் ஊழலைத் தடுக்கும் வகையில் கன்னியாகுமரி கலெக்டர் வெளியிட்டுள்ள இந்த சுற்றறிக்கை ஒரு வரவேற்கத்தக்க நடவடிக்கை. பணப்பதிவேடு கட்டாயமாக்கப்பட்டிருப்பது, அலுவலகங்களுக்குள் நடக்கும் சந்தேகத்திற்கிடமான பணப் பரிவர்த்தனைகளைக் குறைக்க உதவும்.

கடந்த ஜூலை மாதம் மட்டும் 24 பேர் கைது செய்யப்பட்டு, ரூ.1.3 கோடி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில், பணப்பதிவேடு கட்டாயமாக்கப்பட்டிருப்பது ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக அமைந்துள்ளது.இருப்பினும், இந்த சுற்றறிக்கை முறையாகச் செயல்படுத்தப்படுமா, மேலும் இதை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை பொதுமக்கள் உன்னிப்பாக கவனிக்க வேண்டும். ஒரு சுற்றறிக்கை மட்டும் போதாது. அதை செயல்படுத்தும் மனநிலையும், கண்காணிப்பும் அவசியம்.

கடந்த காலங்களில் பல சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டு, அவை மறந்து போன சம்பவங்கள் உண்டு. இந்த முறை அந்த வரலாறு திரும்பக் கூடாது. மேலும், இது போன்ற சுற்றறிக்கைகள் அனைத்து மாவட்டங்களுக்கும் பொதுவானதாக அமைய வேண்டும்.

அடுத்து என்ன நடக்கும்?

புதிய சுற்றறிக்கையின் அடிப்படையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களிலும் பணப்பதிவேடுகள் பராமரிக்கப்பட உள்ளன. மேலும், இந்த சுற்றறிக்கையை மீறுபவர்கள் மீது லஞ்ச ஒழிப்புத்துறை நடவடிக்கை எடுக்க வாய்ப்புள்ளது. உயர் நீதிமன்றம், இந்த சுற்றறிக்கையின் செயல்பாட்டைக் கண்காணித்து, தேவையான உத்தரவுகளைப் பிறப்பிக்கலாம். இந்த நடவடிக்கைகள், அரசு அலுவலகங்களில் ஊழலை குறைக்க உதவும். மற்ற மாவட்ட ஆட்சியர்களும் இதே போன்ற சுற்றறிக்கைகளை வெளியிட வாய்ப்புள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்கொலை எண்ணம் தடுப்போம்..



வலியில்லாத வானம் இல்லை
விடைகள் இல்லாத புதிரும் இல்லை.

நினைத்தது எல்லாம் கிடைப்பதும்
இல்லை; கிடைத்தது எல்லாம்
இனிப்பதும் இல்லை.

வருவதை புரிந்து ஏற்றுக் கொண்டால்
வருத்தங்கள் அதிகம் வாழ்வில் இல்லை.

தொடக்கமே உச்சமாக அமைந்து விடாது.
தரும்பும் துச்சமாக நினைக்கக் கூடாது.

ஒருவேளைச் சோற்றுக்கு ஏங்கிய
பிள்ளைகள் உலகிற்கே
சோறிட்ட கதைகள் உண்மை.

பட்டங்கள் பெறாத பாமரர்கள்
இங்கு பல்கலைக்கழகங்கள் கட்டிய
உயர்வு உண்மை.

தெருவோரம் வாழ்ந்தோரை பின்
நாட்களில் ஊர்கூடி தேர் இழுக்க
வைத்த உழைப்பும் உண்மை.

உடலையும் நிறத்தையும் உறவையும்
நம்மால் தீர்மானிக்க முடியாது.

படிப்பையும் பதவியையும் நம்மால்
சரியாக கணித்து விட முடியாது.

வருவதை எதிர்கொள்வோம்:
வருத்தங்களை எதிர்கொல்வோம்:

எதையும் தாங்கும் இதயம் கொண்டு
வாழ்ந்திடும் வாழ்க்கையில் சுவை
உண்டு; சுகம் உண்டு;

வீழ்வதற்கு எத்தனையோ
காரணங்களைத் தேடினாலும்..
வாழ்வதற்கு ஒரு காரணம் போதும்;

வாழ்வோம்.



கவிதைப் படைப்பாளர் : காக்கியின் கம்பன்,
நேர்மையின் சிகரம்,
வடுகம் டாக்டர் இரா. சிவகுமாரி IPS.,DIG.,
காவல்துறை இணை ஆணையர்,
ஆவடி போலீஸ் கமிஷனரேட்,
அம்பத்தூர், சென்னை 53







பரிகாரம் என ஏமாற்றி பாலியல் வேட்டை..!

பொள்ளாச்சி சம்பவத்தை மிஞ்சும் 'ஜோதிடர்' கார்த்திகேயனின் லீலைகள்..!

உயர் அதிகாரிகள் என் நண்பர்கள், என்னை யாராலும் எதுவும் செய்ய முடியாது" என்று மிரட்டி, ஜாதகம் பார்க்க வரும் பெண்களின் பலவீனத்தையும், நம்பிக்கையையும் பயன்படுத்தி அவர்களின் மானத்தையும், பணத்தையும் சூறையாடியுள்ளார் கோவையைச் சேர்ந்த ஜோதிடர் ஒருவர். அவரது மிரட்டல்களால் பாதிக்கப்பட்ட பல பெண்கள் வெளிப்படையாகப் பேசத் தயங்கிய நிலையில், தைரியமாக வெளிவந்த சில இளம்பெண்களின் அடுத்தடுத்த பாலியல் புகார்களால் இந்த விவகாரம் பூதாகரமாக வெடித்துள்ளது. காவல்துறை நேர்மையாக விசாரித்தால் பொள்ளாச்சி சம்பவத்தையே மிஞ்சும் அளவிற்கு ஒரு மிகப்பெரிய பாலியல் கொடூரம் வெளிச்சத்திற்கு வரும் என்ற அதிர்ச்சித் தகவல்களோடு கார்த்திகேயனின் போலி முகத்திரை கிழியத் தொடங்கியுள்ளது.

கோவை மாவட்டம். நரசிம்மநாயக்கன் பாளையம் பகுதியில், ஜோதிடம் பார்க்க வரும் பெண்களை வசீகர வார்த்தைகளால் ஏமாற்றி பாலியல் வன்கொடுமை செய்து வருவதாக ஜோதிடர் கார்த்திகேயன் என்பவர் மீது முதலமைச்சரின் தனிப்பிரிவு, டி.ஜி.பி மற்றும் ஆளுநர் அலுவலகத்திற்குப் புகார் மனு அனுப்பியுள்ளார்கள் அவரால் பாதிக்கப்பட்ட பெண்கள். முன்னாள் முதல்வர்கள், ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகளின் பெயர்களைப் பயன்படுத்தி, "என்னை யாரும் எதுவும் செய்ய முடியாது" என மிரட்டிவரும் இவர் மீது, அவரது தந்தையின் மர்ம மரணம் தொடர்பாகவும் புகார்கள் எழுந்துள்ளன.

இதுகுறித்து ஜோதிடர் கார்த்திகேயனால் பாதிக்கப்பட்ட பெண்கள் எழுதியுள்ள அந்த புகார் கடிதத்தில், "கோவை மாவட்டம், நரசிம்ம நாயக்கன் பாளையம் பகுதியைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட பெண் தெரிய படுத்திவது : எங்கள் பகுதியில் கார்த்திகேயன் என்கிற ஜோதிடர் நரசிம்மநாயக்கன் பாளையம் பகுதியில் ஜோதிடம் பார்க்கும் தொழில் செய்து கொண்டிருக்கிறார். தொலைபேசியில் 6.30 முதல் 7.00 மணிக்குள் போன் செய்து அப்பாயிண்ட்மெண்ட் வாங்க வேண்டும். அப்படி வாங்கும்போது அடுத்த நாள் காலை 5.00 மணிமுதல் 11.00 மணி வரை ஏதாவதொரு நேரத்திற்கு வரச் சொல்வார். அவர் வரச் சொல்லும் நேரத்திற்கு சென்றால் ஜாதகத்தை வாங்கிக் கொண்டு ஜாதகத்தைக் கணிக்காமலே வாய்மொழியாக ஜாதகம் சொல்லுவார்.

ஒரு ஜாதகத்திற்கு 500/ பெறுகிறார். பெண்களிடம் அவர்களின் வசதிகேற்ப ஜாதகத்தில் குறை என்று அவர்களை வசியம்செய்து ஏமாற்றிகொண்டிருக்கிறார். பாலியல் ரீதியாக பெண்களைத் தன் இச்சைக்கு இணங்க வற்புறுத்தி பாலியல் வன்கொடுமை செய்து கொண்டிருக்கிறர். தாங்கள் இதனைச் சரியான முறையில் விசாரணை செய்து இங்கு வரும் பெண்களைக் காப்பாற்றுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் என்றும், இவர் முன்னாள் முதல்வர்கள் எடப்பாடி பழனிசாமி, மு.க.ஸ்டனின் குடும்பத்தினர் தன்னிடத்தில் ஜாதகம் பார்த்து செல்கிறார்கள் என எல்லோரிடமும் பெருமையுடன் பேசி வருகிறார். மேலும், "எனக்கு காவல்துறை உயர் அதிகாரிகள், ஐஏஎஸ் அதிகாரிகளிடம் நெருங்கிய நட்பு உள்ளது. என்னை யாரலும் ஒன்றும் செய்து விடமுடியாது" என்றும் கூறி மிரட்டி வருகிறார்.

இவர் கடந்த 10 ஆண்டுகளாக

இப்பகுதியில் உள்ள பெண்கள், ஜாதகம் பார்க்க வரும் பெண்களை பாலியல் இச்சைக்கு தள்ளி வருகிறார். இந்த வன்கொடுமையில் சிக்கி சின்னாபின்னமாகும் பெண்கள் யாரிடமும் வெளியில் சொல்ல முடியாமல் தவித்து வருகிறார்கள்.

எனவே தகுந்த விசாரணை செய்து அனைத்து பெண்களையும் காப்பாற்றுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" எனக் கூறப்பட்டுள்ள அந்த பகீர் புகார் கடிதம் முதலமைச்சரின் தனிப்பிரிவு, தமிழக காவல் துறை தலைவர், ஆளுநர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அடுத்த கட்ட அதிர்ச்சியாக மற்றொரு 30 வயது இளம்பெண் ஒருவர் கோவை நரசிம்ம நாயக்கம்பாளையம் பகுதியைச் சேர்ந்த ஜோதிடர் கார்த்தியேன் மீது பரபரப்பு புகார் ஒன்றை அளித்துள்ளார். கோவை சரக போலீஸ் ஐ.ஜி.யிடம் அளித்துள்ள புகார் மனுவில் " எனது திருமணத்திற்காக என் பெற்றோர் நீண்டகாலமாக வரன் பார்த்து வந்தனர். எதுவும் சரிவர அமையவில்லை.

இந்த சூழலில் எனக்கு திருமணம் விரைவில் நடைபெற வேண்டும் என்ற நோக்கத்தில் பல பரிகாரங்கள் செய்து வந்தனர். திருமணத்திற்கு சரியான வரன் எதுவும் அமையாததால் பெற்றோர் பட்ட துயரத்தினால் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளானேன். இதனைத் தொடர்ந்து கடந்த 3 ஆண்டுகளுக்கு முன் நண்பர் ஒருவர் மூலம் கோவை நரசிம்மநாயக்கன் பாளையம் பகுதியில் உள்ள ஜோதிடர் கார்த்திகேயனை சந்தித்தேன். அவர் "சில பரிகாரங்களைச் செய்தால் விரைவில் உனக்கு திருமணம் நடக்கும்" என கூறினார்.

பரிகாரம் என்ற பெயரில் பல முறை என்னை நேரில் அழைத்து சந்தித்தார். பின்னர் ஒருகட்டத்தில் அவரே என்னை திருமணம் செய்து கொள்வதாக ஆசைவார்த்தைக் கூறி என்னை கட்டாயப்படுத்தி பலமுறை உல்லாசமாக இருந்தார். அவர் என்னை நிச்சயம் திருமணம் செய்து கொள்வார் என நம்பினேன். கடன் பிரச்சினை இருப்பதாகக் கூறி நான் திருமணத்துக்கு சேமித்து வைத்த பணத்தைக் கேட்டார், கொடுத்து விட்டேன். ஒருமுறை தனது உறவினர் விபத்தில் சிக்கி விட்டதாகக் கூறி ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் பெற்றார். என்னிடம் இருந்த பணத்தை அபகரித்துக் கொண்ட பின் திடீரென என்னுடன் பேசுவதை நிறுத்தி விட்டார் என்று அப்பெண் அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளார். சம்மந்தப்பட்ட நபர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும்.

மேலும் பெண்கள் ஜாதகம் பரிகாரம் என்ற பெயரில் யாரிடமும் ஏமாறாமல் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். இது போன்ற மோசடி நபர்கள் எல்லா இடங்களிலும் இருப்பார்கள். பெண்கள் தான் எப்போதும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். நம் தமிழக முதலமைச்சர் பெண்களுக்கு ஏதாவது என்றால் கடுமையான நடவடிக்கை எடுப்பேன் என சட்ட சபையில் போலீஸ் மானிய கோரிக்கையில் கூறியுள்ளார். இந்த விஷயத்தில் நடவடிக்கை எடுப்பாரா? பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நியாயம் கிடைக்குமா? சட்டம் தன் கடமையைச் செய்யுமா என பொறுத்திருந்து பார்ப்போம்.





நமது விஜிலென்ஸ் 15 ஆம் ஆண்டு முப்பெரும் விழா

நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழின் 15 ஆம் ஆண்டு தொடக்க விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல் விழா, விஜிலென்ஸ் சாதனையாளர்கள் விருது வழங்கும் விழா என விஜிலென்ஸ் முப்பெரும் விழாவானது 2026 ஆகஸ்ட் 23ஆம் தேதி அன்று சென்னை குரோம்பேட்டை பாலாஜி ரெசிடென்சி ஹாலில் சென்னை அம்பத்தூர் ஆவடி போலீஸ் கமிஷனரேட் காவல்துறை இணை ஆணையர் காக்கியின் கம்பன் நேர்மையின் சிகரம் வடுகம் டாக்டர் இரா சிவக்குமார் ஐபிஎஸ் டிஐஜி, சென்னை கடலோர காவல் படை காவல்துறை துணைத் தலைவர் அன்பின் உருவம் நேர்மையின் சிகரம் D.மகேஷ் குமார் ஐபிஎஸ் டிஐஜி மற்றும் திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் அன்பின் அடையாளம் பா விஜய்ராஜ் எம் எல் ஏ ஆகியோர்களின் தலைமையில் விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் குட்டிப்புலி பட புகழ் பிரபல வெள்ளித்திரை நடிகர், இயக்குனர் M.ராஜாசிங், நடனக் கலைஞர் திரைப்பட தயாரிப்பாளர் இயக்குனர் நடிகர் M.ராஜேஷ் கண்ணா, தெய்வமகள் புகழ் வெள்ளித்திரை சின்னத்திரை பிரபல நடிகர் R.அரவிந்த் மோதிலால் காதரே மற்றும் தெய்வமகள் புகழ் வெள்ளித்திரை சின்னத்திரை பிரபல நடிகர் பிரகாஷ் ராஜன் ஆகியோர்கள் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார்கள்.

மேலும் இவ்விழாவினை விஜிலென்ஸ் குடும்பத்தின் செல்லப் பிள்ளைகள் விஜிலென்ஸ் குடும்பத்தின் வருங்கால நிர்வாக இயக்குனர்களான செல்வன் நடன புயல், நடிகர், விஜிலென்ஸ் டாக்டர் கிருஷ்ணன் ஆனந்தன் மற்றும் செல்வி நடிகை விஜிலென்ஸ் துஜிதா ஆனந்தன் ஆகிய இருவரும் குத்து விளக்கேற்றி நிகழ்ச்சியினைத் தொடங்கி வைத்தார்கள்.

நமது விஜிலென்ஸ் பத்திரிக்கை, விஜிலென்ஸ் டிவியின் சிறப்பாசிரியர் அரக்கோணம் எஸ் என் ஆர் நிகழ்ச்சியினைத் தொகுத்து வழங்கினார்.

பற்றி ஒரு சிறப்புத் தொகுப்பு..

நமது விஜிலென்ஸ் பத்திரிக்கை, விஜிலென்ஸ் டிவி, விஜிலென்ஸ் மக்கள் இயக்கம் மற்றும் விஜிலென்ஸ் கல்வி அறக்கட்டளையின் சட்ட ஆலோசகர் பிரபு அரசு வரவேற்புரை ஆற்றினார். நமது விஜிலென்ஸ் பத்திரிக்கை, விஜிலென்ஸ் டிவியின் இணை ஆசிரியர் மற்றும் விஜிலென்ஸ் மக்கள் இயக்கதின் மாநில பொருளாளர் விஜிலென்ஸ் டாக்டர் பா. தமிழ் பாரதி ஆனந்தன் சிறப்புரையாற்றினார். ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் சமூக பாதுகாப்புத் திட்டம் வட்டாட்சியர் V. உமா மகேஸ்வரன் வாழ்த்துரை வழங்கினார்.

மேலும் இவ்விழாவில் விஜிலென்ஸ் குடும்பத்தின் செல்லப் பிள்ளைகள் செல்வன் விஜிலென்ஸ் நடிகர் டாக்டர் கிருஷ்ணன் ஆனந்தன், விஜிலென்ஸ் செல்வி நடிகை துஜிதா ஆனந்தன் மற்றும் செல்வன் பெர்பெட்ச்வா ஆகியோர்களின் நடன நிகழ்ச்சி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து லால்குடி சரவணன் மார்ச்சில் ஆர்ட்ஸ் அகாடமியின் பயிற்சித் தலைவர் துகில் வர்ணன் சிலம்பம் ஆடினார்.

மேலும் இவ்விழாவில் 2026 ஆம் ஆண்டில் வாழ்க்கையில் உழைப்பால் உயர்ந்து, பல்வேறு சமூகப் பணிகளில் ஈடுபட்டு, பொதுமக்களுக்கு நலிந்த பிரிவினர்களுக்கு பயன் தரும் வகையில் கல்வித்துறை, மருத்துவத்துறை, ஆன்மீகத்துறை,









தொழில்துறை, அரசியல் துறை, கலைத்துறை, விவசாயத்துறை, காவல்துறை, நீதித்துறை, சமூகநலத்துறை, விளையாட்டுத்துறை என பல்வேறு துறைகளில் பொது மக்களுக்கும், நலிந்த பிரிவினர்களுக்கும் சேவை ஆற்றியவர்களுக்கு நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழின் சார்பாக விருதுகளும் நற்சான்றிதழ்களும் 200க்கும் மேற்பட்டவர்களுக்கு நமது விஜிலென்ஸ் ஹானஸ்ட் விருது, நமது விஜிலென்ஸ் சேவா ரத்னா விருது, நமது விஜிலென்ஸ் சாதனையாளர் விருது, நமது விஜிலென்ஸ் சேவை செம்மல் விருது, நமது விஜிலென்ஸ் வாழ்நாள் சாதனையாளர் விருது, நமது விஜிலென்ஸ் சிறந்த தொழிலதிபர் விருது, நமது விஜிலென்ஸ் சிங்கத்தமிழன் விருது, நமது விஜிலென்ஸ் சாதனைத் தமிழன் விருது, நமது விஜிலென்ஸ் காவல்துறை மாமணி விருது, நமது விஜிலென்ஸ் காவல்துறை நம்பிக்கை விருது, நமது விஜிலென்ஸ் வித்தகன் விருது, நமது விஜிலென்ஸ் சிறந்த பேரூராட்சித் தலைவர் விருது, நமது விஜிலென்ஸ் சிறந்த இளம் மருத்துவர் விருது, நமது விஜிலென்ஸ் அன்பு மருத்துவர் விருது, நமது விஜிலென்ஸ் சிறந்த மருத்துவர் விருது, நமது விஜிலென்ஸ் சிறந்த கல்வியாளர் விருது, நமது விஜிலென்ஸ் இளம் சாதனையாளர் விருது, நமது விஜிலென்ஸ் சிறந்த சிலம்ப ஆசான் விருது, நமது விஜிலென்ஸ் சிறந்த ஓட்டுநர் பயிற்சி பள்ளி விருது, நமது விஜிலென்ஸ் சிறந்த டூ ஸ்டால் விருது, நமது விஜிலென்ஸ் இளம் நடனக்க கலைஞர் விருது, நமது விஜிலென்ஸ் சிறந்த சமூக சேவகர் விருது, நமது விஜிலென்ஸ் சிறந்த தங்கும் விடுதி விருது, நமது விஜிலென்ஸ் சிறந்த கண் பரிசோதனை மையம் விருது, நமது விஜிலென்ஸ் இளம் எழுத்தாளர் விருது, நமது விஜிலென்ஸ் இளம் கவிஞர் விருது, நமது விஜிலென்ஸ் ஹானஸ்ட் மனிதன் விருது, நமது விஜிலென்ஸ் தொழில் முனைவோர் விருது, நமது விஜிலென்ஸ் சிறந்த தொழில்நுட்பக் கல்வியாளர் விருது, நமது விஜிலென்ஸ் சிறந்த உணவகம் விருது, நமது விஜிலென்ஸ் சாதனை நாயகன் விருது என பல்வேறு வகையான சிறப்பு விருதுகளும், பதக்கங்களும், நற்சான்றிதழ்களும், நினைவு பரிசும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மேலும் இந்நிகழ்ச்சியில் நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழ் / விஜிலென்ஸ் டிவியில் சிறப்பாகப் பணியாற்றிய நிருபர்களுக்கு 2026 ஆம் ஆண்டு நமது விஜிலென்ஸ் சிறந்த பத்திரிகையாளர் விருதும், பதக்கமும், நற்சான்றிதழும், நினைவு பரிசும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மேலும் இந்நிகழ்ச்சியில் பெண்களுக்கு இலவச தையல் மிஷின்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான மூன்று சக்கர சைக்கிள்கள், நலிந்த பத்திரிகையாளர்களுக்கு உதவிகள், நூற்றுக்கும்

மேற்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இலவச சேலை, வேஷ்டி சட்டைகள் மற்றும் கண் தெரியாத 25 நபர்களுக்கு சேலை வேஷ்டி சட்டைகள் மற்றும் உணவுகளும் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

விஜிலென்ஸ் குடும்பத்தின் நிறுவன தலைவர் அம்பாசிடர் சேவாரத்னா வித்தகன் நவீன பத்திரிகை உலகின் தந்தை சாதனைத் தமிழன் விஜிலென்ஸ் டாக்டர் ஆனந்தன் துரைராஜ் அவர்களின் ஏற்பாட்டில் இவ்விழா இனிதே சிறப்பாக நடைபெற்றது இவ்விழாவில் 500க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



















இணை ஆசிரியர் விஜிலென்ஸ் DR.A.கிருஷ்ணன்





மனித குலத்தையே அழிக்கும் ஏ ஐ..

ஏ.ஐ.ஜாம்பவான் ஜேக்கோப் காக்சன் வார்னிங்..

ஏ ஐ தொழில்நுட்பம் எதிர்காலத்தில் மனிதர்களை அழிக்கக் கூடும் என்று கூறி, முன்னணி ஏ ஐ நிறுவனமான 'ஆன்ட்ரோபிக்' அமைப்பிலிருந்து ஒரு முக்கிய ஆய்வாளர் தன் வேலையை விட்டு வெளியேறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜேக்கோப் காக்சன் என்ற அந்த நபர், உலக நாடுகள் மற்றும் நிறுவனங்கள் செய்யும் இந்த அவசரமான போட்டி மனிதர்களின் உயிருக்கே ஆபத்தாக முடியும் என்று எச்சரித்துள்ளார்.

கடந்த மூன்று ஆண்டுகளாக ஓபன் ஏஐ மற்றும் ஆன்ட்ரோபிக் போன்ற பெரிய ஏஐ நிறுவனங்களில் இவர் வேலை பார்த்துள்ளார். இந்த இரண்டு நிறுவனங்களும் எந்தவித பொறுப்பும் இல்லாமல் ஓடிக் கொண்டிருக்கின்றன என்று இவர் வெளிப்படையாகக் குற்றம் சாட்டியுள்ளார். தம்மைக் தாங்களே மிக வேகமாக வளர்த்துக் கொள்ளும் அதிபுத்திசாலி கம்ப்யூட்டர் அறிவைத் தேடி இந்த நிறுவனங்கள் ஓடுவதால், மனிதகுலம் பேராபத்தில் சிக்குகிறது என்று கூறியுள்ளார்.

அதாவது இவர்கள் உருவாக்கும் ஏஐ வரும் காலத்தில் மனிதர்களின் தேவையே இன்றி தானே வளரும் திறன் கொண்டது. மனிதர்கள் சொல்லாமல் அதுவே அதன் அறிவை வளர்த்துக்கொள்ளும். இதன் மூலம் மனித குலமே அழியும்.

இந்த ஏஐ தொழில்நுட்பம் மிகவும் சக்தி வாய்ந்தது. இதை எவரும் சாதாரணமாக நினைக்கக் கூடாது. கூடிய விரைவில் இந்த ஏஐ அமைப்புகள் எந்தவொரு கம்ப்யூட்டரையும் ஹேக் செய்யலாம், எந்த வேலையையும் ஒரே இரவில் மாற்றலாம், கையில் பெரிய அதிகாரத்தையும் எடுக்கும். கடந்த சில ஆண்டுகளாக இதன் வளர்ச்சி மிக வேகமாக உள்ளது, அது இன்னும் குறையவில்லை

இதனால் உலகமே அழியும் நிலை ஏற்படும். ஏஐயை உருவாக்கும் முக்கிய நிபுணர்களே, இன்னும் சில ஆண்டுகளுக்குள் இது மனிதகுலம் அனைத்தையும் அழித்துவிடும் என்று நம்புகிறார்கள். இது விளம்பரத்துக்காகச் சொல்லப்பட்ட விஷயம் அல்ல. வெளியில் பேசும்போது நிறுவனத்தின் பெரிய அதிகாரிகள் இதைச் சுலபமாகச் சொன்னாலும், தங்களுக்குள் பேசும்போது இவர்கள் பயந்து நடுங்குகிறார்கள். மனித வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு இது பெரிய ஆபத்து.

"இவ்வளவு ஆபத்து என்று தெரிந்தும் ஏன் இதைத் தொடர்ந்து செய்கிறார்கள்?" என்று பலரும் கேட்கலாம். ஓபன்ஏஐ நிறுவனத்தில் இருப்பவர்கள் இதன் உண்மையான ஆபத்தை இன்னும் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை. ஆனால், ஆன்ட்ரோபிக் நிறுவனத்தில் இருப்பவர்களுக்கு ஆபத்து நன்றாகத் தெரியும். இருப்பினும், மற்றவர்கள் இதை செய்யும் முன், நாமே முந்திக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் இந்த போட்டியில் இறங்கியுள்ளனர்.

தனியார் அலுவலகங்களில் உட்கார்ந்துகொண்டு, உலகத்தையே அழிக்கப் போகும் இந்த விபரீத போட்டியில் இறங்குவது மிகத் தவறு. சரியான பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாமல் இப்படி அவசரமாக ஓடுவது எவ்விதத்திலும் சரியல்ல.

இதைத் தடுக்க உலக நாடுகள் சேர்ந்து சில கடுமையான விதிகளை உருவாக்க வேண்டும். ஏஐ கணினிகள் மேலும் வளருவதைத் தற்காலிகமாகத் தடுத்தால் மட்டுமே இந்த உலகளாவிய போட்டியை நிறுத்த முடியும் என்று அவர் கூறியுள்ளார்.

கடைசியாக, ஏஐ நிறுவனங்களில் வேலை செய்யும் மற்ற ஆய்வாளர்களுக்கும் அவர் ஒரு கேள்வியை வைத்துள்ளார். அடுத்த சில ஆண்டுகளில் என்ன நடக்கப் போகிறது என்று யோசித்து பாருங்கள். இதன் உண்மையான விளைவு என்னவென்று தெரியாமல், கட்டுப்படுத்த முடியாத ஒரு ஏஐ அமைப்பை நீங்களும் உருவாக்கப் போகிறீர்களா? அல்லது இது இப்படித்தான் நடக்கும் என்று பார்த்துக்கொண்டு வேலை பார்க்கப் போகிறீர்களா? என்று கேட்டுவிட்டு அவர் தன் வேலையை விட்டு வெளியேறியுள்ளார். அவரின் இந்த எச்சரிக்கை ஏஐ உலகையே மிரள வைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



சென்னை சாகுல்



அமெரிக்க அதிபர் டிரம்ப் அதிரடி அறிவிப்பு..

ஈரான் போர் முடிவுக்கு வருமா?..

ஈரான் அமெரிக்கா இடையே நிகழும் மோதல் முடிவுக்கு வருவதாக தெரிவதில்லை. கிட்டதட்ட 6 மாதங்களுக்கும் மேலாக இரு நாடுகளும் நடத்தி வரும் போர் காரணமாக உலக சந்தையில் கச்சா எண்ணெய் விநியோகம் தடைபட்டு, கச்சா எண்ணெய் விலை தாறுமாறாக உயர்ந்துள்ளது.கச்சா எண்ணெய் விலை உயர்வால் சாமானிய மக்களுக்கு பெட்ரோல், டீசல் விலை உயர்ந்து சிரமப்படுகின்றனர், ஆனால் அமெரிக்க அதிபர் டிரம்புக்கோ கச்சா எண்ணெய் விலையில் நிகழும் ஒவ்வொரு மாற்றமும் பணத்தைக் கொட்டும் ஒரு விஷயமாக இருக்கிறது.

மீண்டும் போர் பதற்றம் ஏற்படும் என்ற அச்சத்தில் பிரெண்ட் கச்சா எண்ணெய் ஒரு பேரல் மீண்டும் 100 டாலர்களைத் தாண்டியுள்ளது. கச்சா எண்ணெய் விலை உயர்வால் மேலும் பெட்ரோல்,டீசல் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த அசாதாரண சூழ்நிலையில், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தன்னுடைய எண்ணெய் முதலீடுகளில் பலமில்லியன் கணக்கான டாலர்களை லாபமாக ஈட்டியுள்ளதாக CNBC வெளியிட்டுள்ள பகுப்பாய்வு அறிக்கை தெரிவிக்கிறது. ஈரான் உடனான போர் தொடர்பான டிரம்பின் ஒவ்வொரு அறிவிப்பும் கச்சா எண்ணெய் விலையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.அந்த வகையில் இந்த 6 மாதத்தில் டிரம்ப் அதிகமாக கச்சா எண்ணெய் விலையால் பாதிக்கப்படும் எரிசக்தி நிறுவனங்களின் பங்குகளில் தொடர்ந்து வர்த்தகம் செய்து வந்துள்ளார்.

பிப்ரவரி 27 போர் தொடங்குவதற்கு முந்தைய நாள் முதல் ஆகஸ்ட் 31 வரை, டிரம்ப் எண்ணெய் மற்றும் எரிசக்தி முதலீடுகள் மூலம் தோராயமாக 1.5 மில்லியன் டாலர்கள் முதல் 4.4 மில்லியன் டாலர்கள் வரை லாபம் ஈட்டியுள்ளதாக CNBC மதிப்பிட்டுள்ளது.AI மனிதர்களை கொல்லும். Chatgpt, Anthropic நிறுவன முன்னாள் ஆய்வாளர் பகீர்!.. இதனால் தனது அதிபர் பதவியை டிரம்ப் தவறாகப் பயன்படுத்துகிறார். வர்த்தகத்தில் லாபம் பார்க்க ஏதுவாக ஈரான் போர் தொடர்பான முடிவுகளை எடுக்கிறார் என பல புகார்கள் எழுந்துள்ளன. ஆனால் இந்த வர்த்தகங்களை டிரம்ப் நேரடியாக மேற்கொள்ளவில்லை என வெள்ளை மாளிகை கூறுகிறது. வெள்ளை மாளிகைச் செய்தி தொடர்பாளர் டேவிஸ் இங்கிள், டிரம்போ அல்லது அவரது குடும்பத்தினரோ இந்த போர்ட்ஃபோலியோவை இயக்குவதற்கு எந்தவிதமான ஆலோசனைகளையும் வழங்குவது இல்லை என்றும், முதலீடு தொடர்பான அனைத்து முடிவுகளும் தனிப்பட்ட மேலாளர்களால் மட்டுமே எடுக்கப்படுகின்றன என்றும் கூறியுள்ளார். இருந்தாலும் டிரம்பின் முடிவுகள் முன்கூட்டியே மேலாளர்களுக்கு சென்று அதற்கேற்ப வர்த்தகம் நடக்கிறதா என்ற சந்தேகமும் எழுப்பப்படுகிறது.

முன்னதாக டிரம்ப் அமைப்பு ,வெளியிலுள்ள நிதி நிறுவனங்கள் தான் இந்த முதலீட்டு முடிவுகளைக் கட்டுப்படுத்துவதாக விளக்கம் தந்துள்ளது. Bigg Boss அடேங்கப்பா..

சௌரவ் கங்குலியின் பிக்பாஸ் சம்பளத்தை பாத்தீங்களா.. நம்ம விஜய் சேதுபதிக்கே ஷாக்..!அமெரிக்கா இஸ்ரேல் படைகள் ஈரான் மீது முதல் தாக்குதல் நடத்திய பிறகு பங்கு சந்தை நடந்த முதல் நாளான மார்ச் 2 அன்று, டிரம்பின் கணக்குகள் 8 முக்கிய எண்ணெய் மற்றும் எரிசக்தி நிறுவனங்களில் பங்குகளை வாங்கியுள்ளன. இதன் பின்னர் எண்ணெய் விலை உயர்ந்து இந்நிறுவன பங்குகள் உயர்ந்தன. டிரம்ப் போர் நிறுத்தம் குறித்த அறிவிப்பு வெளியிட்ட உடன் இந்நிறுவன பங்குகள் விற்கப்பட்டன. அப்போது எண்ணெய் விலை சரிந்தது ஆகியவற்றை நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். இதற்கிடையே Transparency International U.S. அமைப்பின் நிர்வாகி ஸ்காட் கிரேடாக் டிரம்பின் போர் நிறுத்த முயற்சிகள் அவரது கணக்குகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டு முடிவுகளுடன் நேரடியாக ஒத்துப்போவது போல் அமைந்துள்ளது. இருந்தாலும், இந்த வர்த்தகங்கள் குறித்து டிரம்புக்கு முன்கூட்டியே தெரியும் என்பதற்கோ அல்லது அவரது கொள்கை முடிவுகளுக்காகவே இந்த வர்த்தகங்கள் நடத்தப்பட்டன என்பதற்கோ எந்தவொரு நேரடியான ஆதாரமும் உறுதிப்படுத்தப்படவில்லை.



ஓசூர் பரந்தாமன்

ரூபாய்.6 கோடி மெத்தம்பெட்டமைன் கடத்தல் !.. பெங்களூரில் தங்கியிருந்த நைஜீரியர் உள்பட இருவர் கைது..

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே ஜுஜுவாடி சோதனைச் சாவடியில் ரூபாய்.6 கோடி மதிப்பிலான மெத்தபெட்டமைன் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்ட வழக்கில், பெங்களூரில் தங்கியிருந்த இருவரை ஓசூர் சிப்காட் போலீசார் கைது செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த மாதம், ஜுஜுவாடி சோதனைச் சாவடியில் ஆம்னி பேருந்தில் பயணம் செய்த திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த ரகு என்பவரை போலீசார் சோதனை செய்தபோது, அவரிடம் மெத்தபெட்டமைன் போதைப்பொருள் இருந்ததாகக் கூறப்படுகிறது.

சுமார் ரூபாய்.6 கோடி மதிப்பிலான அந்த போதைப் பொருள் மும்பையிலிருந்து கோவா மற்றும் பெங்களூர் வழியாக உடுமலைப்பேட்டைக்கு பயணித்துள்ளார்.

இதையடுத்து ரகுவை கைது செய்த சிப்காட் போலீசார், இந்த போதைப்பொருள் கடத்தலின் பின்னணியில் மேலும் யார் யார் உள்ளனர் என்பது குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டனர்.

அதன் தொடர்ச்சியாக, போலீசாரின் விசாரணையில் கிடைத்த தகவல்களின் அடிப்படையில், பெங்களூர் சித்தாபுரா பகுதியில் உள்ள கிரீன்லேண்ட் அடுக்குமாடி குடியிருப்பில் தங்கியிருந்த இருவரை போலீசார் கைது செய்தனர்.

அங்கு தங்கியிருந்த நைஜீரியாவைச் சேர்ந்த 22 வயதுடைய எக்ஸெல் என்பவர், பெங்களூரில் உள்ள ஜெயின் பல்கலைக்கழகத்தில் B.Sc. Medical Radiography இரண்டாம் ஆண்டு படித்து வருகிறார். அதே குடியிருப்பில் தங்கியிருந்த 23 வயதுடைய ஜெய்சன் என்பவர், கோயம்புத்தூர் மாவட்டம் அன்னூர் அருகே நாகம்புதூரைச் சேர்ந்தவர். இவர் M.Com படிப்பை முடித்துவிட்டு பெங்களூரில் உள்ள ஐடி நிறுவனத்தில் பணியாற்றி வந்துள்ளார்.

இருவரும் ஒரே குடியிருப்பில் தங்கியிருந்த போது நண்பர்களாகப் பழகி வந்துள்ளார்கள். அப்போது எக்ஸெல், ஜெய்சனிடம் வங்கிக் கணக்கு விவரங்களைப் பெற்றுள்ளார். ஜெய்சனிடமிருந்து பெற்ற மூன்று வங்கிக் கணக்குகளை போதைப்பொருள் தொடர்பான பணப் பரிவர்த்தனைகளுக்குப் பயன்படுத்தி வந்துள்ளார்.

இதையடுத்து சிப்காட் காவல் நிலைய ஆய்வாளர் இளவரசன் தலைமையில், போலீசார் கார்த்திக், உதவி ஆய்வாளர் ஜெய்கணேஷ் உள்ளிட்ட குழுவினர் பெங்களூரில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

இதன் தொடர்ச்சியாக பெங்களூர் சித்தாபுரா பகுதியில் உள்ள கிரீன்லேண்ட் அடுக்குமாடி குடியிருப்பில் தங்கியிருந்த எக்ஸெல் மற்றும் ஜெய்சன் ஆகிய இருவரையும் போலீசார் கைது செய்து. அவர்களிடமிருந்து சுமார் 150 கிராம் போதைப்பொருள் பறிமுதல் செய்துள்ளார்கள்.

கைது செய்யப்பட்ட இருவரையும் ஓசூர் சிப்காட் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், இந்த போதைப் பொருள் கடத்தல் மற்றும் பணப் பரிவர்த்தனையில் தொடர்புடைய நபர்கள் குறித்து போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.விசாரணை முடிவில் இருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி பிறகு புழல் சிறையில் அடைக்க உள்ளார்கள்.

நமது விஜிலென்ஸ் இதழின் 15 ஆம் ஆண்டுத் தொடக்க விழாவிற்கு சரண்யா மணிமாறனின்





வாழ்த்து மடல்

“உண்மையின் ஒளியாய் — விழிப்பின் மொழியாய்!”
ஆனந்தன் துரைராஜ் —
அறிவைத் தேடி, மெய்ம்மையை நாடி,
அயராது உழைத்து, அறநெறி ஓம்பி,
எழுத்தைச் செங்கோலாய் ஏந்தி, ஏற்றத்தை நோக்கி,
சமூக விழிப்புணர்வின்
சீரிய கம்பீரக் குரலாய் மிளிர்கிறது
“நமது விஜிலென்ஸ்”!
தமிழ் பாரதி ஆனந்தன் —
தாய்த்தமிழின் தேன்சுவை ஊட்டி,
தரமான சிந்தனை விதைகளை விதைத்து,
சமூக நலத்தின் பேரொளி ஏற்றி,
செந்தமிழின் சீரிய சிறப்பையும்,
அறத்தின் மாண்புமிக்க மேன்மையையும்
தலைமுறை தோறும் தழைத்தோங்கச் செய்வீர்!
எழுத்தில் பிறழாத நேர்மை;
எண்ணத்தில் சான்றோரின் மேன்மை;
சொல்லில் குழப்பமில்லா தெளிவு;
செயலில் குறைவிலாச் செம்மை;
உண்மையை நிலைநிறுத்தும் உறுதி;
உழைப்பால் உயரும் விழுமியம் —
இவையே இதழியலை
இமயமென உயர்த்தும் உயரிய நெறிகள்!
பதினைந்து ஆண்டுகள் —
காலத்தின் வெறும் கணக்கல்ல; கடமையின் கம்பீரக் கையெழுத்து!
பக்கங்களின் சாதாரண பயணமல்ல; பண்பாட்டின் பரிணாமப் பயணம்!
வெறும் செய்திகளின் தொகுப்பல்ல;
சமூக விழிப்புணர்வின் சாட்சியமாய் நிற்கும் வரலாற்றுப் பதிவு!
உண்மை உரக்கப் பேசட்டும் — உலகம் உண்மை உணரட்டும்;
நேர்மை நிலைபெறட்டும் — நாடு நிமிர்ந்து நிற்கட்டும்;
நற்றமிழ் தழைக்கட்டும் — சர்வதேசத் தரம் உயரட்டும்;
“நமது விஜிலென்ஸ்”
நாளும் பல நற்சாதனை படைக்கட்டும்!
“எழுத்துச் சுடர் விழிப்பூட்டட்டும்!
எண்ணச் சுடர் எழுச்சியூட்டட்டும்!
உண்மைச் சுடர் உலகெங்கும் உயர்ந்து நிற்கட்டும்!
‘நமது விஜிலென்ஸ்’
நூறாண்டும் நற்றமிழின் நம்பிக்கைக் குரலாய்
நிலைத்து நின்று சிறக்கட்டும்!”
முனைவர் D. ஆனந்தன் துரைராஜ் அவர்களுக்கும்,
தமிழ் பாரதி ஆனந்தன் அவர்களுக்கும்,
“நமது விஜிலென்ஸ்” இதழின் ஆசிரியர் குழுவினருக்கும்,
15ஆம் ஆண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க தொடக்க விழாவில்
இதயம் நிறைந்த இனிய நல்வாழ்த்துகள்!

— கவிதை ஆக்கம்:
ஆசிரியர் திருமதி. சரண்யா மணிமாறன், B.B.A.,
எழுத்தாளர் - சமூகச் சிந்தனையாளர்

NAMATHU VIJILENCE Owned and Published by Vijilence DR.D.ANANDHAN, 78/25, Ferry Ghat Road, Musiri - 621 211, Trichirappalli District. Printed at CHENNAI OFFSET PRINTERS, 19/1, 21/2, Kitabath Khan Bhadur Street, Ellis Road, Chennai - 600 002. Founder/Publisher/Editor : Vijilence DR.D.ANANDHAN. Cell : 89734 15000.
All Rights Reserved Legal Jurisdiction in Trichy City Court Only. Nothing in Namathu Vijilence is intended to defame any person. But expressed in Good Faith, Pursuit of Truth and Public Good.